9. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டதாக விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள், கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அதுபற்றி உடனே அறிவிக்க வேண்டும். இவ்வேற்பாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்துக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு.

எனதெண் : பொ நி/3/196
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2.
1969 ம் ஆண்டு பெப்ருவரி மீ 21 ந் உ.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

**கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு**

**அளத்தல் போதனாசிரியர்—1 ஆந் தர பதவி**

(தொடரெண் : பொ. நி/3/196)

1. முழுப்பெயர் (தெளிவான எழுத்துகளில்) : ————.

2. தபால் விலாசம் : ————.
(விலாசத்தில் ஏற்படும் யாதேனும் மாற்றம் உடனே அறிவிக்கப்பட வேண்டும்)

3. சாக்கியம் : ————.
(வம்சாவழி காரணமாகவா பதிவு காரணமாகவா இலங்கையர் எனக் குறிப்பிடுக. பதிவு காரணமாக நீர் இலங்கைப் பிரசையாயின் பிரசாவுரிமைப் பத்திரத்தின் தொடர்பிலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடுக)

4. (அ) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியன்று உள்ளபடி வயது :
வரு. ———— மா. ———— நாள் ————.

(ஆ) பிறந்த திகதி : ————.
வரு. ———— மா. ———— நாள் : ————.
(பிறப்புச்சாட்சிப் பத்திரத்தின் பிரதியை இணைக்கவும்).

5. பின்வருவோர் பிறந்த இடம் : —
(அ) விண்ணப்பதாரி : ————.
(ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் : ————.
(இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் : ————.
(ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பூட்டன் : ————.

6. (அ) விவாகம் செய்தவரா, செய்யாதவரா, தாரமிழந்தவரா ? : ————.
(ஆ) விவாகம் செய்தவராயின், பின்வரும் விபரங்களைக் கொடுக்க :
(i) விவாகத் திகதி : ————.
(ii) பிள்ளைகளின் எண்ணிக்கை : ————.

7. (அ) 15 வயது தொடக்கம் படித்த பாடசாலைகள், கல்லூரிகள், நிலையங்கள் :—

| பொதுக் கல்வி | | | உயர்தொழில்/தொழில் நுட்பக் கல்வி (யாதேனும் படித்திருப்பின்) | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | தொடக்கம் | வரை | நிலையம் | தொடக்கம் | வரை |
| | | | | | |

(ஆ) கடைசிப் பாடசாலையிலிருந்து விலகிய திகதி : ————.

8. கல்வித் தகைமைகளும் கடைசியாகச் சித்தி எய்திய பரீட்சையும் அதன் திகதியும் : —
(அ) சிங்களத்தில் : ————.
(ஆ) ஆங்கிலத்தில் : ————.
(இ) தமிழில் : ————.

9. உயர்தொழில் தகைமைகளும் தொழில் நுட்பத் தகைமைகளும் அல்லது இவைகளில் யாதேனும்—(யாதேனும் பெற்றிருப்பின்) : ————.
(அ) அவைகள் பெற்ற திகதிகளும் (ஆ) படித்த நிலையங்களும் : ————.

10. வாசிப்பு, எழுத்து, சம்பாஷணை, பேச்சு மொழிபெயர்ப்பு ஆகிய வற்றில் பின்வரும் மொழிகளில் பெற்றுள்ள தேர்ச்சி : —
(அ) சிங்களம் : ————.
(ஆ) தமிழ் : ————.
(இ) ஆங்கிலம் : ————.

11. விசேட தகைமைகள் (அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ள விசேட தகைமைகளை/அனுபவத்தை அல்லது இவ்விரண்டினையும் பெற்றிருக்கிறீரா ? அங்ஙனமாயின், அவை பற்றிய விபரங்களையும் அவை பெற்றுக் கொள்ளப்பட்ட திகதிகளையும் குறிப்பிடுக) : ————.

12. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக உம்மீது குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதா ? அங்ஙனமாயின் (அ) தீர்ப்பு அளிக்கப்பட்ட திகதி (ஆ) வழக்கு எண், (இ) குற்றத் தீர்ப்பின் தன்மை ஆகிய வற்றைக் குறிப்பிடுக : ————.

13. நீர் பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு உமக்கு இருப்பின், எவ்வளவுக்கு ? : ————.

14. வேறு யாதேனும் விபரங்கள் (விசேட உரிமைகள் ஆதியன) : ————.

15. நற்சாட்சிப் பத்திரங்கள் கொடுத்துதவியவர்களின் பெயர்களும் பதவிப் பெயர்களும் (அத்தகைய பத்திரங்களின் பிரதிகள்—மூலப்படிகள் அல்ல—இணைத்தனுப்பப்பட வேண்டும். ஏற்கனவே அரசினர் சேவையிலிருப்பவர்கள் இவ்விபரங்களைக் கொடுக்க வேண்டியதில்லை): ————.

16. முன்னர் யாதேனும் படையில் சேவை புரிந்து விலகியவராயின் :
(அ) படைக் கூற்றின் பெயர் : ————.
(ஆ) வகித்த பதவி : ————.
(இ) சேர்ந்த, விலக்கப்பட்ட திகதிகள் ஆகியவற்றைக் குறிப்பிடுக : ————.

17. (அ) பாடசாலையிலிருந்து விலகிய காலம் தொடக்கம் புரிந்த உத்தியோகம் :—

(i) வகித்த பதவிகள் : ————.

(ii) சேர்ந்த, விலகிய திகதிகள் : ————.

(iii) விலகியதற்கான காரணம் : ————.

(ஆ) அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு ஸ்தல ஆட்சிச் சபையின் கீழ் முன்னர் கடமை புரிந்திருப்பின் நிரந்தர பதவியா அல்லது தற்காலிக பதவியா வகித்தீர், சேவை எந்நேரத்திலேனும் நிறுத்தப்பட்டதா ஆகிய விபரங்களையும் (அ) அத்தகைய உத்தியோகம் (ஆ) சேர்ந்த, விலகிய திகதிகள் (இ) வேலை நிறுத்தப்பட்டதற்கான காரணங்கள் ஆகியவற்றையும் குறிப்பிடவும் : ————.

18. தற்போது வகிக்கும் உத்தியோக விபரங்கள் :—

(i) பதவிப் பெயரும் பதவியின் தரமும் : ————.

(ii) இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதா/தற்காலிகமானதா/சமயோசிதமா ? : ————.

(iii) தற்போதைய (சகாயப் படிகள் உட்படாத) சம்பளமும் சம்பள விகிதமும் : ————.

(iv) அடுத்த சம்பள உயர்ச்சித் திகதி : ————.

19. இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமிக்கப்படுதற்குப் பின்னராயின் எல்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————.
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

இடம் : ————.

திகதி : ————.

2–1099/2—28.2.69 ந திகதிய வர்த்தமானி இல. 14,843

---

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### தொழில்நுட்ப வரைதல் போதனாசிரியர் பதவிகள்

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள தொழில்நுட்ப நிலையங்களில் உள்ள தொழில்நுட்ப வரைதல் போதனாசிரியர் பதவிகளுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன. விண்ணப்பங்கள், கீழ்க்காணும் மாதிரிப் படிவமுறையில் தயாரிக்கப்பட்டு 1969 ம் ஆண்டு மார்ச் மாதம் 20 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக " நிரந்தரக் காரியதரிசி (பொது நிர்வாகக் கிளை), கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமாகும். விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும். நியமனம் மூன்று வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் அமையும். அரசாங்கத்தின் கீழ் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமான ஒரு பதவியை ஏற்கனவே வகிக்கும் ஒருவர் இந்நியமனத்துக்குத் தெரிவு செய்யப்படின், அவருடைய நியமனம் விதிக்கப்படும் ஒரு காலத்திற்கு பதில் நியமனமாக அமையும்.

3. விண்ணப்பதாரிகள் ஒவ்வொருவரும் பின்வரும் தகைமைகளுடையவரெனத் திருப்தியான முறையில் நிரூபிக்க வேண்டும் :—

(i) 1969 ம் ஆண்டு மார்ச் மாதம் 20 ந் திகதியன்று 40 வயதுக்கு மேற்படாதவராயும் 21 வயதுக்குக் குறையாதவராயும் இருக்க வேண்டும். (இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ளவர்களுக்கு அமையாது).

(ii) சிறந்த நல்லொழுக்கமும் தேகாரோக்கியமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(iii) சி. பா. த. பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும் ; அல்லது

க. பொ. த. (சாதாரணதர) பத்திரப் பரீட்சையில், இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி, சிங்களம்/தமிழ், எண்கணிதம்/கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். அல்லது சமனான அல்லது உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(iv) லண்டன் சிற்றி அன்ட் கில்ட்ஸ் நிலையத்தால் பொறிச்சாலை எந்திரவியல் அல்லது தச்சுவேலை அல்லது இணைப்பு வேலையில் வழங்கப்படும் தராதரப் பத்திரம் ; அல்லது

(v) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியால் வழங்கப்படும் பொறிமுறை எந்திரவியல் மாலை நேரத் தராதரப் பத்திரம் ; அல்லது

(vi) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் விஞ்ஞான இடைமானி (எந்திரவியல்) தராதரப் பத்திரம் ; அல்லது

(vii) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியால் வழங்கப்படும் கனிட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் (மின்சார, பொறிமுறை) தராதரப்பத்திரம் ; அல்லது

(viii) சமமான அல்லது உயர்ந்த தகைமைகள் ;

(ix) சிங்கள மொழியில் வகுப்புகளை நடாத்தக்கூடியவராய் இருக்க வேண்டும். அல்லது சிங்கள மொழியில் வகுப்புகளை நடாத்தக் கூடிய தேர்ச்சியை நியமனத் திகதியிலிருந்து 3 வருடகாலத்துக்குள் பெற வேண்டும்.

4. **இப்பதவிக்குரிய வருடாந்தச் சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு :—**

ரூபா 3,420—120 × 4—180 × 8—5,340. ரூபா 4,080, ரூபா 4,800 ஆகிய சம்பளங்களுக்கு மேலே பெறமுன் நியமதாரிகள் வினைத் திறமைகாண் தடைப் பரீட்சைகளில் சித்தியடையவேண்டும்.

**குறிப்பு.**—நியமிக்கப்படுதற்குத் தெரிவு செய்யப்படுவோர் போதிய செயல்முறை அனுபவமும் படிப்பித்தல் அனுபவமும் அல்லது இவ்விரண்டினுள் எதையேனும் பெற்றிருக்க வேண்டும். எனினும், 5 வருடங்களுக்குக் குறைந்த கால அனுபவம் பெற்றுள்ள ஒருவர் தெரிவு செய்யப்படுமிடத்து, வேண்டிய அனுபவத்தைப் பெறும்வரை அவருடைய நியமனம் பதில் நியமனமாக அமைவதுடன் வருடாந்தம் ரூபா 3,420 என்ற மாறாத சம்பளத்துடன் நியமிக்கப்படுவார்.

5. அரசினர் சேவையிலுள்ள, தகைமையுடைய அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் தத்தம் பகுதித் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும். விதிக்கப்படும் திகதிக்குப் பின் இக்காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளப்படும் இத்தகைய விண்ணப்பங்கள், விதிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அவை உரிய பகுதித் தலைவரால் பெற்றுக் கொள்ளப்பட்டனவென்றும் நியாயமான காரணங்களைக் காட்டி அவற்றை ஏற்றுக்கொள்ளும்படி அப்பகுதித் தலைவர் சிபார்சு செய்தாலன்றி, ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

6. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் சாதனங்களின் பிரதிகளை (மூலப் பிரதிகளையல்ல) இணைத்தனுப்ப வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு. கு. சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) பெற்றுள்ள அதியுயர்ந்த கல்வித் தராதரப் பத்திரமும் உயர் தொழிற் தராதரப் பத்திரங்களும்.

(இ) விண்ணப்பதாரியின் தகைமைகள், ஒழுக்கம், இப்பதவிக்கு நியமிக்கப்படுதற்கான அவருடைய தகுதி ஆகியவற்றைக் குறிப்பிடும் மூன்று சமீபகால நற்சாட்சிப் பத்திரங்கள்.

**முக்கிய குறிப்பு.**—அரசினரின் கீழ் ஏற்கனவே சேவையிலுள்ளவர்கள் மேற்போந்த (இ) ம் உபபந்தியில் குறிப்பிட்டுள்ள நற்சாட்சிப் பத்திரங்களை அனுப்ப வேண்டியதில்லை.

7. விண்ணப்பங்களும் ஏனைய உரிய சாதனங்களேனும் கடிதங்களேனும் இவ்வமைச்சின் நிரந்தரக் காரியதரிசியின் விலாசத்துக்கே அனுப்பப்பட வேண்டும் ; எக்காரணத்தையிட்டும் அவைகள் எவ்வுத்தியோகத்தரினதும் சொந்தப் பெயருக்கு அனுப்பப்படலாகா.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் I ம் பாகம், II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டதாக விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள், கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அதுபற்றி உடனே அறிவிக்க வேண்டும். இவ்வேற்பாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு.

எனதெண் : பொ. நி/3/197,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1969 ம் ஆண்டு பெருவவரி மீ 21 ந வ.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு**

**தொழில்நுட்ப வரைதல் போதனாசிரியர் பதவிகள்**
(தொடரென் : பொ. நி/3/197)

1. முழுப்பெயர் (தெளிவான எழுத்துகளில்) : ————.

2. தபால் விலாசம் : ————.
(விலாசத்தில் ஏற்படும் யாதேனும் மாற்றம் உடனே அறிவிக்கப்பட வேண்டும்)

3. சாதியம் : ————.
(வம்சாவழி காரணமாகவா பதிவு காரணமாகவா இலங்கையர் எனக் குறிப்பிடுக. பதிவு காரணமாக நீர் இலங்கைப் பிரசையா யின் பிரசாவுரிமைப் பத்திரத்தின் தொடர்பிலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடுக).

4. (அ) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியன்று உள்ளபடி வயது : வருடம் :—— மாதம் : —— நாள் : ——
(ஆ) பிறந்த திகதி : வரு. :—— மா. : —— நாள் :——
(பிறப்புச்சாட்சிப் பத்திரத்தின் பிரதியை இணைக்கவும்)

5. பின்வருவோர் பிறந்த இடம் :—
(அ) விண்ணப்பதாரி : ————.
(ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் : ————.
(இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிபாட்டன் : ————.
(ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பூட்டன் : ————.

6. (அ) விவாகம் செய்தவரா, செய்யாதவரா, தாரமிழந்தவரா ? : ————.
(ஆ) விவாகம் செய்தவராயின், பின்வரும் விபரங்களைக் கொடுக்க :—
(i) விவாகத் திகதி : ————.
(ii) பிள்ளைகளின் எண்ணிக்கை : ————.

7. (அ) 15 வயது தொடக்கம் படித்த பாடசாலைகள், கல்லூரிகள், நிலையங்கள் :—

| பொதுக் கல்வி | | | உயர் தொழில்/தொழில்நுட்பக் கல்வி(யாதேனும்படித்திருப்பின்) | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | தொடக்கம் | வரை | நிலையம் | தொடக்கம் | வரை |
| | | | | | |

(ஆ) கடைசிப் பாடசாலையிலிருந்து விலகிய திகதி : ————.

8. கல்வித் தகைமைகளும் கடைசியாகச் சித்தி எய்திய பரீட்சையும் அதன் திகதியும் :—
(அ) சிங்களத்தில் : ————.
(ஆ) ஆங்கிலத்தில் : ————.
(இ) தமிழில் : ————.

9. உயர்தொழில் தகைமைகளும் தொழில் நுட்பத் தகைமைகளும் அல்லது இவைகளில் யாதேனும் (யாதேனும் பெற்றிருப்பின்) : ————.
(அ) அவைகள் பெற்ற திகதிகளும் (ஆ) படித்த நிலையங்களும் : ————.

10. வாசிப்பு, எழுத்து, சம்பாஷணை, பேச்சுமொழிபெயர்ப்பு ஆகிய வற்றில் பின்வரும் மொழிகளில் பெற்றுள்ள தேர்ச்சி :—
(அ) சிங்களம் : ————. (ஆ) தமிழ் :————. (இ) ஆங்கிலம் :————

11. விசேட தகைமைகள் (அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ள விசேட தகைமைகளை/அனுபவத்தை அல்லது இவ்விரண்டினையும் பெற்றி ருக்கிறீரா ? அங்ஙனமாயின், அவை பற்றிய விபரங்களையும் அவை பெற்றுக் கொள்ளப்பட்ட திகதிகளையும் குறிப்பிடுக) : ————.

12. சட்ட முறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக உம்மீது குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதா ? அங்ஙனமாயின் (அ) தீர்ப்பு அளிக்கப்பட்ட திகதி (ஆ) வழக்கு எண், (இ) குற்றத் தீர்ப்பின் தன்மை ஆகியவற்றைக் குறிப்பிடுக : ————.

13. நீர் பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு உமக்கு இருப்பின், எவ்வளவுக்கு ? : ————.

14. வேறு யாதேனும் விபரங்கள் (விசேட உரிமைகள் ஆதியன) :————

15. நற்சாட்சிப் பத்திரங்கள் கொடுத்துதவியவர்களின் பெயர்களும் பதவிப் பெயர்களும் (அத்தகைய பத்திரங்களின் பிரதிகள்—மூலப்படிகள் அல்ல—இணைத்தனுப்பப்பட வேண்டும். ஏற்கனவே அரசினர் சேவையிலிருப்பவர்கள் இவ்விபரங்களைக் கொடுக்க வேண்டியதில்லை) : ————.

16. முன்னர் யாதேனும் படையில் சேவை புரிந்து விலகியவராயின்—
(அ) படைக் கூற்றின் பெயர் : ————.
(ஆ) வகித்த பதவி : ————.
(இ) சேர்ந்த, விலக்கப்பட்ட திகதிகள் ஆகியவற்றைக் குறிப்பிடுக : ————.

17. (அ) பாடசாலைகளிலிருந்து விலகிய காலம் தொடக்கம் புரிந்த உத்தியோகம் :—
(i) வகித்த பதவிகள் : ————.
(ii) சேர்ந்த, விலகிய திகதிகள் : ————.
(iii) விலகியதற்கான காரணம் : ————.
(ஆ) அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு ஸ்தல ஆட்சிச் சபையின் கீழ் முன்னர் கடமை புரிந்திருப்பின் நிரந்தர பதவியா அல்லது தற்காலிக பதவியா வகித்தீர், சேவை எந்நேரத்தி லேனும் நிறுத்தப்பட்டதா ஆகிய விபரங்களையும் (அ) அத் தகைய உத்தியோகம் (ஆ) சேர்ந்த, விலகிய திகதிகள் (இ) வேலை நிறுத்தப்பட்டதற்கான காரணங்கள் ஆகியவற்றை யும் குறிப்பிடவும் : ————.

18. தற்போது வகிக்கும் உத்தியோக விபரங்கள் :—
(i) பதவிப் பெயரும் பதவியின் தரமும் : ————.
(ii) இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதா/தற்காலிகமானதா/சமயோசிதமா ? : ————.
(iii) தற்போதைய (சகாயப் படிகள் உட்படாத) சம்பளமும் சம்பள விகிதமும் : ————.
(iv) அடுத்த சம்பள உயர்ச்சித் திகதி : ————.

19. இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவை யேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்ற வராக்கப்படுதற்கும் நியமிக்கப்படுதற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

இடம் : ————.
திகதி : ————.

2–1099/3—28.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,843.

### இலங்கை அரச கடற்படை

### உதவி முகாரி ("அசிஸ்ரன்ற் ஃபோமன்") பதவி—பொறி முறைக் கப்பல் ஓடாவி ("மெக்கானிக்கல் ஷிப்றைற்")

இலங்கை அரச கடற்படையில் ஓர் உதவி முகாரிப் (பொறி முறைக் கப்பல் ஓடாவி) பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **சம்பளம்:** இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் ஆண்டொன்றுக்கு ரூபா 1,860—ரூ. 120—ரூ. 3,780 ஆகும்.

3. **வேண்டப்பட்ட கல்வித் தகைமைகளும் அனுபவமும்:** ஒவ்வொரு விண்ணப்பகாரரும் தான்—

(அ) க. த. ப. அல்லது அதற்கு ஈடான அல்லது அதனிலுங் கூடிய, பரீட்சையில் சித்தி எய்தியுள்ளார் எனவும்;

(ஆ) நன்கு மதிக்கப்பெற்ற ஒரு பொறியியல் தொழில் நிலையம், அல்லது அரசாங்கத் திணைக்களத்தில் ஐந்து (5 ஆண்டுகள்) ஆண்டுகள் தொழிற் பயிற்சியை வெற்றிகரமாக முடித்துள்ளதோடு மேற்பார்வை செய்யும் வகையில் குறைந்தபட்சம் இரண்டு (2 ஆண்டுகளாவது) ஆண்டுகளாவது சேவை செய்துள்ளார் எனவும்;

(இ) மேற்பார்வை செய்யும் வகையில் குறைந்தபட்சம் ஓர் (1 ஆண்டு) ஆண்டு சேவை உட்பட, மரத்தாலானவும் எஃகாலானவுமான மரக்கலங்களைப் பழுது பார்த்தும் பேணும் நடைபெறும் வேலைக்களம் ஒன்றின் ஒரு பெரும் பிரிவில் குறைந்தபட்சம் மூன்று (3 ஆண்டுகள்) ஆண்டுகள் அனுபவம் உடையவர் எனவும்; மரத்தாலானவும் எஃகாலானவுமான மரக்கலங்கள் செய்தலிலும் கப்பல் சாரத்தளங்கள் பேணுதலிலும் உறுதியான அறிவும் கப்பல் பழுது பார்த்தலுடன் சம்பந்தப்பட்ட எல்லா உபகரணங்களிலும் நன்கு பழக்கப்பட்டவர் எனவும்;

சான்று அளித்தல் வேண்டும்.

4. **வேண்டப்பட்ட பிற தகைமைகள்—**

விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும் அத்துடன் தான்;

(அ) 1968 ஆம் ஆண்டு, டிசெம்பர் மாதம் 31 ஆந் திகதியன்று வயதில் இருபத்தைந்து (25 ஆண்டுகளுக்கு) ஆண்டுகளுக்குக் குறையாமலும் முப்பத்தைந்து (35 ஆண்டுகளுக்கு) ஆண்டுகளுக்கு மேற்படாமலும் இருக்கிறார் எனவும் (ஏலவே அரசாங்க சேவையில் உள்ளோர்க்கு இத்தேவை ஏற்புடையதாகாது);

(ஆ) நற்பண்பு உடையவர் எனவும் காத்திரமான உடற்கட்டு உடையவர் எனவும்;

சான்று அளித்தல் வேண்டும்.

5. **ஆட்சேர்த்தல் நியதிகள்—**

(அ) இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றிச் சம்பளத்திற்கு உரித்துடையதுமாகும். விதவைகள் அனாதையர் இளைப்பாற்றிச் சம்பள நிதித்திட்டத்திற்கு உதவுதொகைகள் இறுக்கப்படல் வேண்டும்.

(ஆ) தெரியப்பட்ட அபேட்சகர் குறுகியகால அறிவித்தலின் பேரில் கடமையேற்குமாறு வேண்டப்படலாம். அவர்கள் இத்தீவின் எப்பாகத்திலேனும் சேவைபுரிய ஆயத்தமாய் இருத்தல் வேண்டும். தற்போது கொழும்பு, திருகோணமலை, காரைநகர், கல்பிட்டிய ஆகிய இடங்களிற் கடற்படையானது தனது நிறுவனங்களைக் கொண்டுள்ளது.

6. **சேவை நிபந்தனைகள்—**

தெரியப்பட்ட அபேட்சகர், அரசகரும மொழிக் கொள்கையின் நோக்கத்திற்காக அரசாங்க சேவையிற் புதிதாகச் சேர்ந்தவர் எனின்—

(அ) அன்னாரது தகுதிகாண் காலவெல்லை மூன்று (3 ஆண்டுகளாக) ஆண்டுகளாக இருக்கும்.

(ஆ) 1956 ஆம் ஆண்டின் முப்பத்துமூன்றும் (33 ஆம்) எண்கொண்ட அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவான்வேண்டி இப்போது நடைமுறையிலிருக்கும் அல்லது எதிர்காலத்தில் புகுத்தப்படும் எந்தச் சட்டங்களுக்கும் விதிகளுக்கும், இசைந்தொழுகுவர் எனும் நிபந்தனைக்கு இணங்குதல் வேண்டும்.

(இ) இதன்கீழ் (ஈ) யிற் காட்டப்பெற்றுள்ளவாறு அவர் தனது தகுதிகாண் காலவெல்லையின்போது அரசகரும மொழியில்—சிங்களத்தில்—தொழிலாற்றும் அறிவைப் பெறுதல் வேண்டும்.

(ஈ) தகுதிகாண் காலவெல்லையின் இறுதியில் பதவியில் உறுதிப்படுத்தப்படுதல், பிறவற்றுள், (சிங்களத் தேர்ச்சி) சோதனையின் முதலாம் (1 ஆம்) தாத்திலும் இரண்டாம் (2 ஆம்) தாத்திலும் நியமனத் திகதியிலிருந்து முறையே ஓர் (1 ஆண்டினுள்ளும் இரு (2 ஆண்டுகளுள்ளும்) ஆண்டுகளுள்ளும் சித்தியெய்துதலைப் பொறுத்திருக்கும். விதிக்கப்பட்ட சோதனைகளில் விதிக்கப்பெற்ற காலவெல்லைகளுட் சித்திபெறத் தவறுகை சம்பள ஏற்றம் இடைநிறுத்தப்படும் விளைவை உண்டாக்கும். விதிக்கப்பட்ட காலவெல்லைக்கு அப்பாற்பட்ட ஆறு (6 மாத காலத்தினுள்ளும்) மாத காலத்தினுள்ளும் அவ்வச் சோதனையிற் சித்தி அடையப்பெறுவிடின் இடைநிறுத்துகை நிறுத்துகையாக மாற்றப்படும்; அத்துடன் அந்நிறுத்துகை சோதனையிற் சித்தி எய்தப்படும்வரை செயற்படும்.

(உ) தகுதிகாண் காலவெல்லையின் முடிவிலும் சிங்களத்தில் விதிக்கப்பெற்ற தேர்ச்சித் தரம் அடையப்படாவிடின் 120 ஆம், 121 ஆம் நிருவாகப் பிரமாணங்களின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகும்.

7. இலங்கையிலுள்ள (பிரித்தானிய) ஐக்கிய இராச்சியத் தளங்களை (இலங்கை அரசாங்கம் பொறுப்பேற்றமை காரணமாக 1956 ஆம் ஆண்டு யூலை மாதம் 6 ஆந் திகதியன்று அல்லது அதன் பின் இலங்கையில் உள்ளனவான (பிரித்தானிய) ஐக்கிய இராச்சிய சேவைகளிலிருந்து விடுதலை செய்யப்பட்ட குடியியல் ஊழியர்களுக்குப் பின்வரும் சலுகைகள் அளிக்கப்படும்:—

(அ) **வயது:** விதிக்கப்பெற்ற உச்ச வயதெல்லைக்குள் அவர்களைக் (அபேட்சகர்களைக்) கொணர்தற் பொருட்டு அவ்வவர்களுடைய வயதிலிருந்து ஐ. இ. சேவைகளின்கீழுள்ள சேவைக் காலவெல்லைகளைக் கழித்தல்.

(ஆ) **கல்வித் தகைமை:** விதிக்கப்பெற்ற கல்வித் தகைமை க. த. ப. ஆக இருக்கும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும், வேண்டப்படும் தகைமை ஏழாந்தரமாயிருக்கிறது.

(இ) **தொழிற்பயிற்சியும் அனுபவமும்:** தொழிற்பயிற்சிக் காலவெல்லை தேவையில்லை எனினும் வேண்டப்பட்ட அனுபவக் காலவெல்லை, தொழிற்பயிற்சிக் காலவெல்லையினால், அதாவது எட்டு (8 ஆண்டுகளாக) ஆண்டுகளாக அதிகரிக்கப்படுகிறது.

8. ஒவ்வொரு அபேட்சகரும் தனது விண்ணப்பத்துடன் பின்வருவனவற்றின் ஒவ்வொரு நகலை இணைத்தல் வேண்டும்:

(அ) பிறப்புச் சான்றிதழ் (ஞானஸ்நானச் சான்றிதழோ உதவிபெறும் பாடசாலைகளுக்கான பிரமாணங்களின் நோக்கத்தின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது).

(ஆ) பெறப்பட்ட உச்சக் கல்வித் தகைமைக்கான சான்றிதழ்,

(இ) முன்னைய அனுபவத்துக்குரிய சான்றிதழ்,

(ஈ) அண்மைக் காலத்திய இரு (2) நற்பண்புச் சான்றிதழ்கள் (ஏலவே அரசாங்க சேவையிலுள்ள அபேட்சகர்கள் இச்சான்றிதழ்களை அளிக்குமாறு வேண்டப்படமாட்டார்).

9. இவ்வரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் முதலாம் (1 ஆம்) பகுதியின் இரண்டாம் (2 ஆம்) பிரிவின் தொடக்கத்திற் பிரசுரிக்கப்பெற்றுள்ள பொது விதிகளின்பால் யாபேரது கவனமும் ஈர்க்கப்படுகிறது.

10. அரசாங்க சேவையிலுள்ளளோரிடமிருந்து வரும் விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர் வாயிலாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

11. விண்ணப்பங்கள், இதன்மேல் வேண்டப்பட்டவாறு கீழ்த்தரப்பட்ட மாதிரிப்படிவ உருவில் முன்னைய அனுபவம், தொழில் ஆகியனபற்றிய முழு விபரங்களைக் கொண்டும், குடியியல் நிருவாக அலுவலகம் கணக்காளரும், இலங்கை அரச கடற்படை, அஞ்சல் அலுவலகப் பெட்டி 593, கொழும்பு, என முகவரியிடப்பட்டும் பதிவு செய்யப்பட்ட தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பத்தை உள்ளடக்கும் கடிதவுறை இடதுபக்க மேல்மூலையில் "உதவி முகாரி (பொறிமுறைக் கப்பல் ஓடாவி)ப் பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிக்கப்பெற்று 1969 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 20 ஆம் திகதியன்று அல்லது அதற்குமுன் குடியியல் நிருவாக அலுவலரும் கணக்காளருமாகிய அலுவலரை வந்தடையும் வண்ணம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

இ. ஆர். சமரசேகர,
குடியியல் நிருவாக அலுவலரும்
கணக்காளரும்,
கடற்படைத்தளபதிக்காக.

தலைநிலையம், இலங்கை அரச
கடற்படை, கொழும்பு 1.
1969, பெப்புருவரி மாதம் 14 ஆம் திகதி.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

**இலங்கை அரச கடற்படை**

**உதவி முகாரி ("அசிஸ்ரன்ற் ஃபோமன்") பதவி பொறிமுறைக் கப்பல் ஓடாவி ("மெக்கானிக்கல் ஷிப்றைற்")**

1. முழுப் பெயர் (பெரிய தெளிவாக எழுத்துக்களில்) :—

2. (i) சொந்த வசிப்பிட முகவரி :————.
(ii) அலுவலக முகவரி :————.

3. பிறப்புத் திகதி (பிறப்புச் சான்றிதழ் இணைக்கப்படவேண்டியது) :————.

4. எந்நாட்டவரென்பது :————.

5. திருமணமானவரா திருமணமாகாதவரா என்பது :—

6. கல்வித் தகைமைகள் (சித்தியெய்தப்பட்ட பரீட்சைகளினதும் பாடங்களினதும் விபரங்களைத் திகதிகளுடன் தருக) :————.

7. தொழினுட்ப அல்லது பிற தகைமைகள் (சான்றிதழ்களின் படிகள் இணைக்கப்படல் வேண்டும்) :————

8. தொழிற்பயிற்சி, பயிற்சி, அனுபவம் இன்னோரன்ன பற்றிய விபரங்களுடன் திகதிகள் :————.

9. பாடசாலையை விட்டு விலகியதிலிருந்து செய்யப்பட்ட தொழில் விபரங்கள் :————.

10. நற்பண்புச் சான்றிதழ்கள்; எந்த ஆட்களிடமிருந்து பெற்று அளிக்கப்பட்டுளவோ அவ்வவர்களது பெயர்களும் பதவிப்பெயர்களும் :————.

11. ஏதும் பிற விபரங்கள் :————.

இவ்விண்ணப்பத்தில் என்னால் அளிக்கப்பெற்ற விபரங்கள் உண்மையானவையும் சரியானவையுமென நான் இத்தால் சான்றுபகர்கிறேன். இதனுள் அடங்கிய எவ்விபரங்களாயினும் பொய்யானவை அல்லது சரியல்லாதன எனக் கண்டுபிடிக்கப்படுமிடத்து, அத்தகைய கண்டுபிடிப்பு தெரிவுக்கு முன்னுயின் தகைமை நீக்கத்திற்கும், நியமனத்திற்குப் பின்னுயின் நட்டஈடின்றிப் பதவி நீக்கத்திற்கும், நான் ஆளாகுவேன் என்பதையும் நானறிவேன்.

திகதி :————

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

2-917—28.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,843

---

இல. வெ. மு/2/178

**கல்வி, கலாசார அலுவல்கள் அமைச்சு**

**தாய்லந்து, ஆசிய தொழில் நுட்பவியல் நிலையத்தால் வழங்கப்படும் புலமைப் பரிசில்கள்—1969/70**

எந்திரவியல் முதுமானிப் பட்டத்துக்கு இட்டுச்செல்லும் பட்டப்பின் படிப்புகள் தொடர்பில் தாய்லந்து, பாங்கொக் ஆசிய தொழில்நுட்பவியல் நிலையத்தால் வழங்கப்படும் புலமைப் பரிசில்களை அளித்தற்பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பின்வரும் துறைகள் சம்பந்தமாகவே விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கடலோரஞ்சார் எந்திரவியல்
சூழல்சார் "
நீரியக்க "
மண்வள "
அமைப்பு "
இடம்பெயர்ச்சி "

தமது பயிற்சி நெறியை பூர்த்தி செய்துகொண்டு திரும்பி வந்தபின் இந்நாட்டின் முன்னேற்றத்துக்குக் குறிப்பிடத்தக்க பணி செய்யக்கூடியவரெனக் கருதப்படும் நல் நுண்ணறிவு ஆற்றல் உடையவர்களுக்கே இப்புலமைப் பரிசில்கள் வகுக்கப்பட்டுள்ளன.

குறிப்பு.—(1) புலமைப் பரிசிலால் ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி ஒரு திட்டம் தொடர்பாக அத்தியாவசியமென அவர் கடமை புரியும் திணைக்களத் தலைவர் 16.5.60 ந் திகதிய 514 ம் இலக்கத் திறைசேரிச் சுற்று நிருபத்துக்கிணங்க அத்தாட்சிப்படுத்தி அச்சுற்றுநிருபத்தில் கேட்டுள்ள பிரகாரம் திட்டம் பற்றிய விபரங்கள் கொடுபட்டாலன்றி எவ் அரசாங்க ஊழியரினது விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

(2) சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழகங்கள், அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் இத்தகைய நிலையங்கள் ஆகியவற்றில் கடமை புரிபவர்களின் விண்ணப்பங்கள் உரிய நிலையத் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும். படிவத்தின் 27 ம் கூட்டை பூரணப்படுத்தி விண்ணப்பத்தை அனுப்பி வைக்கும்படி சம்பந்தப்பட்ட தலைவர் கேட்கப்பட வேண்டும்.

(3) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் ஒரு விண்ணப்பமே அனுப்புவதுடன் ஒரு கற்கை நெறிக்கே விண்ணப்பிக்க வேண்டும்.

2. கால எல்லை.—புலமைப் பரிசில்கள் ஒரு வருடந் தொடக்கம் இரண்டு வருடங்கள் வரையான கால அளவினதாகும்.

எனினும் துர்நடத்தை, வரவில் ஒழுங்கீனம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதியின்றி கல்லூரியில் அல்லது விடுதிச்சாலையில் இல்லாமை, படிப்பில் திருப்தியற்ற முன்னேற்றம், பரீட்சைகளில் சித்தியடையத் தவறுதல் போன்ற காரணங்களையிட்டு தாய்லந்து அதிகாரிகளின் தற்றுணிபுக்கேற்ப புலமைப் பரிசில்கள் பயிற்சி நெறிக் காலத்தின் போது எந்நேரத்திலேனும் நிறுத்தப்படலாம். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில். புலமைப் பரிசு பெற்றவர் தனது சொந்தச் செலவிலேயே இலங்கைக்குத் திரும்பிச் செல்லும்படி வேண்டப்படலாம்.

3. **தகவுத்திறன்.**—அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்திசெய்ய வேண்டும் :—

(i) இலங்கைப் பிரசைகளாக இருக்க வேண்டும்.

(ii) 15.3.69 அன்று 45 வயதுக்குக் குறைந்தவராய் இருக்க வேண்டும்.

(iii) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தின் குடியியல் எந்திரவியல் பட்டமேனும் (இரண்டாம் வகுப்பு) சமமான அங்கீகரிக்கப்பட்ட தகைமையேனும் பெற்றிருக்க வேண்டும்.

(iv) ஆங்கிலத்தில் சிறந்த அறிவு பெற்றிருக்க வேண்டும்.

குறிப்பு.—(1) அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு சபையில் அல்லது கூட்டுத்தாபனத்தில் அல்லது பல்கலைக் கழகத்தில் அல்லது அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் ஒரு நிலையத்தில் விதிக்கப்பட்டுள்ள ஒரு காலத்துக்கு சேவை புரிவதாக ஒரு உடன்படிக்கை அல்லது முறிசெய்துள்ள ஓர் அபேட்சகர் அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் விதிக்கப்பட்டுள்ள காலத்தைப் பூர்த்தி செய்து அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைப்பாடுகளை 15.3.69 அளவில் நிறைவேற்றி இருந்தாலன்றி விண்ணப்பித்தலாகாது.

(2) தற்காலிக நியமனங்களை வகிக்கும் அரசாங்க ஊழியர்களும் நிரந்தர நியமனங்களை வகிக்கும், ஆனால் நியமனங்களில் உறுதிப்படுத்தப்படாதவர்களான அரசாங்க ஊழியர்களும் தங்கள் பதவிகளைத் துறப்பதற்கு சம்மதமாயிருந்தாலன்றி இவற்றுக்கு விண்ணப்பித்தற்கு உரித்துடையராகார். படிவத்தின் 15(ஈ) ம் கூட்டில் அத்தகைய விருப்பம் தெரிவிக்கப்படல் வேண்டும்.

4. **அளிப்பு நிபந்தனைகள்.**—இப்புலமைப் பரிசில்கள் கீழ்க்காணும் நயங்கள் உடையனவாய் இருக்கும்—

(அ) இலங்கையில் இருந்து பாங்கொக்குக்கு போய்த் திரும்புதற்கான விமானமூல ஆகக்குறைந்த பயணச் செலவும் தாய்லந்தில் நுழைதல் தொடர்பான கட்டணமாக 500 Baht சகாயப்படியும்.

(ஆ) உணவுப்படியாக மாதாந்தம் 1,500 Baht

(இ) கற்கைக் கட்டணம்

(ஈ) பயிற்சி நெறிகள் தொடர்பாக கடனாகப் பெற்றுக் கொள்ளப்படும் பாடப் புத்தகங்கள்

(உ) ஆராய்ச்சி, ஆராய்ச்சிக் கட்டுரைச் செலவுகள்.

குறிப்பு.—இப்புலமைப் பரிசில்களுக்குத் தெரிவு செய்யப்படும் அரசாங்க ஊழியர்களுக்கு லீவு வழங்குதல், காலத்துக்குரிய திறைசேரி விதிகளுக்கும் வித்தியா பகுதி விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் அமையும்.

5. **நேர்முகப் பரீட்சை.**—தகவுடைய அபேட்சகர்கள் கொழும்பில், விதிக்கப்படும் நேரத்திலும் இடத்திலும் ஒரு நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமளிக்க வேண்டும். இந்நேர்முகப் பரீட்சை தொடர்பில் பிரயாணச் செலவேனும் வேறு எவ்வித செலவேனும் கொடுபடாது. இந்நேர்முகப் பரீட்சையின்போது தராதரப் பத்திரங்கள் பிறப்புச் சாட்சிப் பத்திரம், தமது உரிமையை அத்தாட்சிப்படுத்தும் சான்றுகள் ஆகியவற்றின் மூலங்களையும் சமர்ப்பிக்கக்கூடியவராய் இருக்க வேண்டும்.

6. **உடன்படிக்கை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், தாய்லந்து செல்லுமுன் பின்வரும் முறையில் இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும் :—

(அ) ஏனைய விடயங்களுடன், விதிக்கப்படும் கற்கை நெறியை விசுவாசமாகவும் விவேகமாகவும் பின்பற்றி திருப்திகரமாகப் பூர்த்தி செய்வதாகவும் வேண்டப்படுமிடத்து, பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு (அரசாங்கத்தால் இது தீர்மானிக்கப்பட வேண்டியது) இலங்கை அரசாங்கத்தின் கீழ் சேவை புரிவதாகவும் ;

(ஆ) உடன்படிக்கையின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய ஒழுகத் தவறுமிடத்து புலமைப் பரிசின் முழுச் செலவையும் (அதாவது புலமைப் பரிசு தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கும் அதனை வழங்கும் முகவராண்மைக்கும் ஏற்படும் முழுச் செலவையும்—அரசினர் ஊழியர்களைப் பொறுத்த வரையில் சம்பளங்கள் சகாயப்படிகள் ஆதியன உட்பட) இலங்கை அரசாங்கத்துக்குத் திருப்பிக் கொடுப்பதாகவும்.

7. **வைத்திய பரீட்சை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் தாய்லந்து கற்கை நெறி ஒன்றினை மேற்கொள்தற்கு வேண்டிய உடல்நலன், மனநலன் உடையவரா என பரீட்சித்தற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஒரு விசேட வைத்தியர் சபையினால் நடாத்தப்படும் வைத்திய பரீட்சையில் தேற வேண்டும்.

8. உத்தேச கற்கை நெறியைப் பின்பற்றுவதால் பயிற்சியாளர்கள் கூடிய சம்பளங்களுக்கேனும் பதவி உயர்ச்சி வாய்ப்புகளுக்கேனும் உரித்துடையராகார்.

9. விண்ணப்பத்தில் கொடுபடும் விபரம் யாதேனும் பிழையெனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னராயின் அளிப்பு மீழ்க்கப்படுதற்கும் விண்ணப்பதாரி பாத்திரராவார்.

10. தெரிவில் தேறிய அபேட்சகர் ஒருவர் தெரிவு செய்யப்பட்ட பின் தெரிவை அல்லது அளிப்பை ஏற்க மறுப்பின், இரண்டு வருட காலத்துக்கு வேறு புலமைப் பரிசில்களைப் பெறும் வாய்ப்பிலிருந்து தடுக்கப்படுவார்.

11. நியமனங்கள் முகவராண்மைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின் அவைகளை ஏற்றுக் கொள்தல் அளிப்பை வழங்கும் முகவராண்மையின் தற்றுணிபையே பொறுத்ததாகையால் இலங்கை அதிகாரிகளின் நியமனமே அளிப்பாகுமெனக் கருதப்படலாகாதென விண்ணப்பதாரிகள் திட்டவட்டமாக அறிந்துகொள்ள வேண்டும்.

12. ஓர் அபேட்சகரின் தெரிவுக்கு எம்முறையிலேனும் ஆதரவு வேண்டல் அல்லது செல்வாக்குப் பிரயோகித்தற்கு எத்தனித்தல் அத்தகைய அபேட்சகரைத் தகுதியற்றவராக்கும்.

13. இவ்விளம்பரத்தின் தேவைகளுக்கும் விண்ணப்பப் படிவத்தில் அச்சிடப்பட்டுள்ள அறிவுறுத்துரைகளுக்கும் சகல வகைகளிலும் அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

14. இவ்வலுவலகத்திலிருந்து பெறற்பாலனவாகிய விசேட படிவத்தில் தயாரிக்கப்படவேண்டிய விண்ணப்பங்கள் 1969 ம் ஆண்டு மார்ச் மாதம் 15 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கொழும்பு 2 மலாய் வீதியிலுள்ள கல்வி, கலாசார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அனுப்பப்பட வேண்டும். உரிய திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

15. ஒவ்வொரு விண்ணப்பம் தொடர்பிலும் ரூ. 10/- பெறுமதியான முத்திரை ஒட்டப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் முதற் பக்கத்தில் அந்நோக்கத்துக்கான இடத்தில் ரூ. 10/- பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரியின் கையொப்பத்தால் அழிக்கப்பட வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் முத்திரைக் கட்டணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

16. ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய பகுதித் தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும். சபைகள், கூட்டுத்தாபனங்கள் பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவி பெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் நிலையங்களிலுள்ள விண்ணப்பதாரிகள் உரிய நிலையத் தலைவர் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரி தனது பதவியிலிருந்து விலகச் சம்மதிக்குமிடத்தும் இத்தேவை அமையும். கல்வி, கலாசார அலுவல்கள் அமைச்சிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய பிரதேச வித்தியாதிபதி மூலம் அனுப்புதல் வேண்டும்.

17. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டவை பற்றி விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள் கல்வி, கலாசார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அதுபற்றி உடனே அறிவிக்க வேண்டும். அங்ஙனம் செய்யத்தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி, கலாசார அலுவல்கள் அமைச்சு.

கல்வி, கலாசார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
20.2.1969.

2-1053—28.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,843

---

## காணிக்கமிசனர் திணைக்களம்

### விவசாயக் குடியேற்றத்திட்ட அதிகாரிகள் பதவிகள்

1969.2.14 ம் திகதி 14,841 ஆம் இலக்கத்தைக் கொண்டு வெளியான அரசாங்க வர்த்தமானியில் பிரசுரமான காணிக்கமிசனர் திணைக்களம், விவசாய குடியேற்றத்திட்ட அதிகாரிகள் பதவிக்கான விளம்பரத்தின் முடிவோடு கீழே பிரசுரமாகும் மாதிரி விண்ணப்பப்படிவத்தைச் சேர்க்கிறேன்.

கே. என். வீரக்கொடி,
காணிக்கமிசனர்.

காணிக்கமிசனர் திணைக்களம்,
கொழும்பு 1,
1969.2.19.

### மாதிரி விண்ணப்பப்படிவம்

### காணிக்கமிசனர் திணைக்களத்தில் குடியேற்ற அதிகாரிகள் பதவிகள்

1. முழுப் பெயர் :————.

2. முதல் எழுத்துடனுன பெயர் :————.

3. தபால் முகவரி :————.

4. (அ) சாதி :————.

   (ஆ) இலங்கைப் பிரசை என்பது பரம்பரையாகவா ? அல்லது பதிவின் மூலமா ? ————.

5. பிறந்த இடமும் திகதியும் :————.

   (அ) விண்ணப்பதாரி பிறப்புச்சாட்சிப் பத்திரத்தின் பிரதியை (உண்மைப் பத்திரமல்ல) அனுத்தல் வேண்டும்.

   (ஆ) விண்ணப்பதாரியின் தகப்பனின் :————.

   (இ) விண்ணப்பதாரியின் தகப்பனின் தகப்பனின் : ————.

   (ஈ) விண்ணப்பதாரியின் தகப்பனின் தகப்பனின் தகப்பனின் :————.

   (விண்ணப்பதாரி இலங்கையில் பிறந்தவராகில் மேலே காட்டப்பட்டுள்ள (அ) வோடு (ஆ) வை அல்லது (இ) யையும் (ஈ) யையும் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பதாரி இலங்கையில் பிறந்தவரல்லாவிடில் (அ) வோடு (ஆ) வையும் (இ) (ஈ) ஆகிய இரண்டையும் நிரப்புதல் வேண்டும்.)

6. சித்தியெய்திய திகதியுடன் கல்வித்தராதரம் :————.
   (சாட்சிப் பத்திரங்களின் (உண்மைப்பிரதியல்ல) பிரதிகள் அணைக்கப்படல் வேண்டும்)

7. வேறு தகைமைகள் :————.

8. விவசாயப் பயிர்ச்சி சம்பந்தமாக பயிர்ச்சி அனுபவம் : ————.

   (சாட்சிப் பத்திரங்களின் (உண்மைப் பிரதியல்ல) பிரதி அணைக்கப்படல் வேண்டும்)

9. பாடசாலையிலிருந்து விலகிய திகதியிலிருந்து இற்றைவரை செய்த தொழில்கள், அது சம்பந்தமான முழு விபரங்களையும் அத்துடன் உத்தியோகம் செய்பவராகில் அதனுல் கிடைக்கும் வேதனமும் வேதன விகிதமும் :————.

10. யுத்த சேவையில் பணியாற்றியவராகில் அதுபற்றிய விபரம் :————.

11. அணைக்கப்பட்டுள்ள பிரதிகளின் எண்ணிக்கை : ————.

12. விண்ணப்பதாரியின் குணதிசயங்கள் பற்றி நற்சாட்சிப் பத்திரம் கொடுத்துள்ளோரில் இருவரின் பெயர், முகவரி, பதவி—

| | |
|---|---|
| 1. பெயர் :————. | 1. பெயர் :————. |
| 2. முகவரி :————. | 2. முகவரி :————. |
| 3. பதவி :————. | 3. பதவி :————. |

மேலே காட்டப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானதெனவும் உண்மையானதெனவும் பிழையற்றதெனவும், உறுதிப்படுத்துவதுடன் இவற்றில் யாதேனும் பிழையெனக் காணப்படுங்கால் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் எவ்வேளையிலும் பதவியிலிருந்து விலக்கப்படுவேன் எனவும் நான் அறிவேன். அத்துடன் நான் நீதிமன்றத்தில் குற்றப்பட்டவனே அல்லது அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்பட்டவனே இல்லையென்பதை இத்தால் விசுவாசத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

————,
விண்ணப்பதாரியின் ஒப்பம்.

திகதி :————.

2-1024—28.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,843

## நீர் வழங்கல், வடிகால் அமைப்பு, உள்ளூராட்சி வேலைகள் பகுதியில் II ம், III ம் தர மின்னியல் முகாரியாளர்கள்

உள்ளூராட்சி அமைச்சின் நீர் வழங்கல், வடிகால் அமைப்பு, உள்ளூராட்சி வேலைகள் பகுதியில் II ம், III ம் தர மின்னியல் முகாரியாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஒரு விண்ணப்பதாரராவது II ம் தரத்தில் நியமிப்பதற்குத் தகுதி உடையவர்களாகக் காணப்படாவிட்டால் முழு வெற்றிடங்களும் III ம் தரத்தினரைச் சேர்ப்பதன் மூலம் நிரப்பப்படும். விண்ணப்பங்கள் யாவும் கீழ்க் கொடுக்கப்பட்டிருக்கும் மாதிரிப்படிவத்தில் நிரப்பப்பட்டு 20.3.69. ஆம் திகதியிலோ அல்லது அதற்கு முன்னரோ எனக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

அ. மின்னியல் முகாரி தரம் III

1. சம்பள அளவுத்திட்டம் : வருடாந்தம் ரூபா 1,860—6 × 120—2,580/-

2. வயதெல்லை : 20.3.69 ஆம் திகதியில் 21 வயதிற்குக் குறையாதவராகவும் 24 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கெனவே அரசாங்க சேவையில் உள்ள அலுவலாளர்களுக்கு வயதெல்லை நிபந்தனை கிடையாது.

3. தேவையான தகைமைகள் :— விண்ணப்பதாரர்.—

(i) (அ) சிரேட்ட பாடசாலைத் தராதரப் பரீட்சையில்

அல்லது

(ஆ) கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் (சாதாரணம்) சிங்களம்/தமிழ் பாஷை, எண் கணிதம் தூயகணிதம் உள்பட ஆறு பாடங்களில் இரண்டிற்கு மேற்படாத இருக்கைகளில்

அல்லது

(இ) அதற்குச் சமமான அல்லது உயர்தர பரீட்சையில் சித்தி அடைந்தவராகவும்,

அத்துடன்

(ii) இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியால் நடாத்தப்படும் கனிஷ்ட தொழில் நுட்ப அலுவலாளர் பயிற்சி நெறியை (மின்னியல், எந்திரவியல்) திருப்திகரமாகப் பூர்த்தி செய்தவராகவோ அல்லது சமமான அல்லது உயர்தரத் தகைமைகள் உடையவராகவும், அத்துடன்

(iii) மின்னியல் முகாரி தொழிற் பயிற்சி நெறியை மேற்கொண்டு பூர்த்தி செய்தவராகவும், மின்னியல் முகாரி III ம் தர நியமனத்திற்காக அத்திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட கனிஷ்ட தொழில் நுட்ப அலுவலாளருக்கான முதலாவது திணைக்களப் பரீட்சையில் சித்தி அடைந்தவராகவும்,

அல்லது

(iv) அங்கீகரிக்கப்பட்ட மின்சார, எந்திரப் பொறியியலாளர் நிறுவனத்தில் 5 வருடத் தொழிற் பயிற்சி பெற்றவராகவும், இவற்றுள் குறைந்தது ஒரு வருடத்திற்காவது மேற்பார்வையாளர் தகைமை பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

குறிப்பு : தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி சிங்களவராக, சிங்கள மொழி மூலம் கல்வி பெற்றவராகவும் இருந்தால் அவர் சிரேட்ட தராதரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சிங்களப் பாஷையில் சித்தி அடைந்தவராக இருத்தல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி 1.1.1961 க்கு முன் இருந்து அரசாங்க சேவையில் இருப்பின் இத் தேவை பிரயோகிக்கப்படமாட்டாது.

4. ஒப்பந்த நிபந்தனைகள் :

(i) பதவி நிரந்தரமானது ஆனால் உபகாரச் சம்பளம் அற்றதாகும்.

(ii) அரசாங்க சேவைச் சகாய நிதிக்கு உதவு தொகை செலுத்தவேண்டும்.

ஆ. மின்னியல் முகாரி தரம் II

1. சம்பள அளவுத்திட்டம் : வருடாந்தம் ரூபா 2,700—9 × 120—3,780/-

2. வயதெல்லை : 20.3.69 ஆம் திகதியில் 25 வயதிற்குக் குறையாதவராகவும், 35 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கெனவே அரசாங்க சேவையில் உள்ள அலுவலாளர்களுக்கு வயதெல்லை கிடையாது.

3. தேவையான தகைமைகள்.— விண்ணப்பதாரர்—

(i) உள்ளூராட்சி அமைச்சின், நீர்வழங்கல், வடிகால் அமைப்பு, உள்ளூராட்சி வேலைகள் பகுதியில் III ம் தர மின்னியல் முகாரியாக, அல்லது அதற்குச் சமமான தரத்தில் வேறு ஏதாவது அரசாங்கத் திணைக்களத்திலோ அல்லது அரசாங்கச் சார்புள்ள திணைக்களத்திலோ 6 வருட அனுபவமுடையவராகவும் இருத்தல் வேண்டும். இவ்வனுபவம் மின்ஆக்கி மோட்டோர் தொடர்பான உபகரணங்கள் முதலியவற்றை இயக்கவும் பேணுதற்குமான அனுபவம் உள்பட உடையவராக இருத்தல் வேண்டும்.

அத்துடன்

(ii) மின்சாரத் திணைக்களத்திற்காக, பரீட்சைப் பகுதியால் நடாத்தப்படும் II ம் தர மின்னியல் முகாரி பரீட்சையில் அன்றேல் நகர தொழிற் சங்கப் பரீட்சைச் சபையால் நடாத்தப்படும் இடைப்பட்ட மின்சாரப் பொறியியலாளர் செயல் முறைப் பரீட்சையில் சித்தி அடைந்திருக்க வேண்டும்,

அல்லது

(iii) III ம் தர மின்னியல் முகாரியாக ஏதாவது அரசாங்க அல்லது அரசாங்கச் சார்பான திணைக்களத்தில் 10 வருட அனுபவம் பெற்றவராகவும் இருக்கவேண்டும். இவ்வனுபவம் மின்ஆக்கி, மோட்டார் தொடர்பான உபகாரணங்கள் முதலியவற்றை இயக்கவும் பேணுதற்குமான அனுபவம் உள்பட உடையவராக இருத்தல் வேண்டும்,

அல்லது

(iv) அங்கீகரிக்கப்பட்ட மின்சாரப் பொறியியலாளர் நிறுவனத்தில் அல்லது நிறுவனங்களில் மின்சார முகாரியாகப் 10 வருட அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் பெரிய டீசல் மின்ஆக்கிகளையும், மின்சார மோட்டோர்களையும், மின்சாரக் கருவிகளைப் பரீட்சித்துப் பேணுதலிலும், பெருங் கொள்ளவு மின்சார மோட்டோர்களுக்கான தொடக்கக் கருவிகளையும் சோதித்தலிலும், பேணுதலிலும், நல்ல அறிவும் அனுபவமும் உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

குறிப்பு : (iv) ன் கீழ் தகுதியுடைய விண்ணப்பதாரர் தேர்வுச் சபையினால் தேர்விற்கு அழைக்கப்படுவர்.

4. ஒப்பந்த நிபந்தனைகள் :

(i) பதவி நிரந்தரமானது ஆனால் உபகாரச் சம்பளம் அற்றதாகும்.

(ii) விதவையர், அனாதையர் இளைப்பாறற் சம்பளத்திட்டத்திற்கு உதவுதொகை செலுத்த வேண்டும்.

இ. (i) அரசாங்க சேவையில் உள்ள அலுவலாளர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்பலாம். திணைக்களத் தலைவர்க்கூடாக அனுப்பப்பட்ட விண்ணப்பங்கள் விதிக்கப்பட்ட திகதிக்குப் பின் கிடைக்கப் பெற்ருல், தாமதத்திற்குச் செல்லுபடியான காரணங்கள் அவர்களாற் காட்டப்பட்டு அவற்றை ஏற்றுக் கொள்ளுமாறு சிபார்சு செய்யப்பட்டாலன்றி விதிக்கப்பட்ட திகதியின்பின் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

விண்ணப்பத்தை அனுப்பும் போது திணைக்களத் தலைவர்கள், விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் விண்ணப்பதாரரை நியமனத்திற்காக விலக்கவோ, முடியாதோ என்பதைக் குறிப்பிட வேண்டும்.

(ii) விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் பிரதிகளை (மூலப்பிரதிகளல்ல) இணைத்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச்சான்றிதழ் ;

**முக்கிய கவனிப்பு :** ஞானஸ்நானச் சான்றிதழ்களோ அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான பிரமாணச் சட்டக் கோவைக்கென வழங்கப்பட்ட சான்றுப்பத்திரங்களோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

(ஆ) உயர்கல்வித் தகைமைச் சான்றிதழ் ;

(இ) நற்சான்றிதழ்கள் இரண்டு (ஏற்கெனவே அரசாங்க சேவையில் இருக்கும் விண்ணப்பதாரரிடம் இருந்து நற்சான்றிதழ்கள் வேண்டப்படமாட்டாது.)

(ஈ) சிங்களம்/தமிழில் சித்தி எய்திய அதி உயர்ந்த சான்றிதழ்.

(iii) அரசாங்க சேவையில் உள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம் II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன, அவற்றைப் பார்க்க.

(iv) விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான வேறு தொடர்புகளும் இரத்மலானை நீர்வழங்கல், வடிகால் அமைப்பு, உள்ளூராட்சி வேலைகள் பகுதி சிரேட்ட உதவிச் செயலாளருக்கு (நிதியும் தாபனமும்) அனுப்பப்பட வேண்டுமேயன்றி இப்பகுதியின் அலுவலாளர் எவருக்கும் பெயர் குறிப்பிட்டு எழுதக் கூடாது.

டபிள்யு. பத்மநாதன்,
சிரேட்ட உதவிச் செயலாளர்.
(நிதியும் தாபனமும்)

உள்ளூராட்சி அமைச்சின்
நீர்வழங்கல், வடிகால் அமைப்பு,
உள்ளூராட்சி வேலைகள் பகுதி,
இரத்மலானை, 11.2.69.

மாதிரிப் படிவம்

**II ம், III ம் தர மின்னியல் முகாரி பதவிகள்**

**உள்ளூராட்சி அமைச்சின் நீர்வழங்கல் வடிகால் அமைப்பு, உள்ளூராட்சி வேலைகள் பகுதி**

1. முழுப் பெயர் (பெரிய எழுத்தில்) :————.
   (அ) பெயர் :————.
   (ஆ) மறுபெயர் :————,
2. தபால் முகவரி (பெரிய எழுத்தில்) :————.
3. பிறந்த திகதி :————.
   20.3.69 ல் சரியான வயது வருடம் :—, மாதம் :—, நாட்கள் :—.
4. தேசீய இனமும் எவ்வாறு பெறப்பட்டதென்பதும் :—
   (அ) பரம்பரையாக :————.
   (ஆ) பதிவினால் :————.
5. பிறந்த இடம்—
   (அ) விண்ணப்பதாரரின் :————.
   (ஆ) விண்ணப்பதாரரின் தகப்பன் :————.
   (இ) விண்ணப்பதாரரின் தந்தைவழிப் பாட்டன் : ————.
   (ஈ) விண்ணப்பதாரரின் தந்தைவழிப் பூட்டன் : ————.
6. விண்ணப்பதாரரின் குடியியல்நிலை (விவாகமானவரா/தனிப்பட்டவரா விவாகரத்துச் செய்தவரா அல்லது தாரமிழந்தவரா)
7. கல்வித்தகைமைகள் :—
   (ஆகக்கூடிய சித்தியெய்திய உயர் பரீட்சை) :——
8. பெற்ற உயர்தொழில், தொழில்நுட்பத் தகைமைகள் இருந்தால் திகதிகளுடன் :————.
9. பாடசாலையை/கல்லூரியை விட்ட காலம் முதல் பார்த்த தொழில் திகதிகளுடன் :————.
10. மின்னொளி முகாரியாளராகவும்/அல்லது மின்னொளி பயிற்சியாளராகவும் உள்ள அனுபவத்தின் விபரங்கள் :————.
11. சிங்களத்தில் பெற்ற மிகக்கூடிய தகைமையைக் கூறுக : ————.
12. நற்பண்புச் சான்றிதழ் அளிப்போரின் பெயரும் முகவரிகளும் (ஏற்கெனவே அரசாங்க சேவையில் உள்ள அலுவலாளர்கள் இச்சான்றிதழ்கள் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படமாட்டார்) :————.
13. 3 ம் பந்தியில் தரப்பட்ட என்ன வாசகங்களின் கீழ் தாங்கள் தகுதி உடையவராக உரிமை கோருகிறீர்கள் ? :————.
14. மேலும் ஏதாவது விபரங்கள் இருப்பின் :————.

இவ்விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் உண்மையானவை என்றும், சரியானவை என்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவையெனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும், நியமிக்கப்படுதற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் ஒப்பம்.

திகதி :————.

2-1016—28.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,843

## பதிவு காரியகர்த்தர் திணைக்களம்

### கண்டி, கண்டிப்பட்டனப் பகுதிக்கான வைத்தியப் பதிவாளர் பதவி

கண்டி, கண்டிப்பட்டனப் பகுதிக்குரிய வைத்தியப் பதிவாளர் பதவிக்கான விண்ணப்பங்கள், கண்டி மாவட்டப் பதிவாளரினால் 1969 ம் ஆண்டு மார்ச் மாதம் 25 ந் திகதி 12 மணி வரையும் ஏற்றுக் கொள்ளப்படும். விண்ணப்பங்கள் யாவும் கீழே தரப்பட்ட மாதிரி விண்ணப்பப் பத்திரத்தில் உள்ளபடி தயாரித்து அனுப்பப்பட வேண்டும்.

2. **வேதனம்.**—இப்பதவி வருடாந்தம் ரூபா 2,700 நிலையான வேதனத்தையுடையது.

3. **வாழ்க்கைச் செலவுப்படி.**— வாழ்க்கைச் செலவுப்படியும், விசேஷ வாழ்க்கைச் செலவுப்படியும் (வழங்கக் கூடிய அளவிற்கு) எழுதுவினைஞருக்காகக் கொடுக்கப்படும் படியுடன் வழங்கப்படும். போக்கு வரத்துச் செலவுக்கென வருடாந்தம் ரூபா 300 வழங்கப்படும்.

4. **சேவை நிபந்தனைகள்.**—

(i) இப்பதவி நிரந்தரமானதும், உபகாரச் சம்பளத்திற்கு உரித்துடையதுமாகும்.

(ii) தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் மூன்று வருட காலத்திற்குத் தகுதிகாண் நிலையில் நியமனம் செய்யப்படுவார்.

(iii) தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் கண்டிப் பெரியாஸ்பத்திரியின் எல்லைக்குள், கண்டி சௌக்கிய சேவை அத்தியட்சரால் ஏற்படுத்திய ஓர் இடத்தில் (சாதனங்களோடு) தங்கள் அலுவலகத்தை வைத்திருத்தல் வேண்டும்.

(iv) பொது விடுமுறை தினங்களைத் தவிர்ந்த ஏனைய கிழமை நாட்களில் அலுவலக நேரம் காலை 7 மணி தொடக்கம் 11 மணிவரையும், பிற்பகல் 2 மணி தொடக்கம் 5 மணிவரையும், பொது விடுமுறை தினங்களிலும் போயா தினங்களிலும் 7 மணி தொடக்கம் 10 மணிவரையும் 2 மணி தொடக்கம் 4 மணி வரையும் என அலுவலக நேரம் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது.

(v) தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் தனிப்பட்ட முறையில் வைத்தியத் தொழில் செய்வதற்கு அனுமதிக்கப்படுவார்; ஆனால் பதிவு காரியகர்த்தரின் அனுமதியின்றி வர்த்தக ஸ்தாபனங்களில் அல்லது விவசாய வேலைகளில் அல்லது தொழில் ஸ்தாபனங்களின் விவகாரங்களில் பங்கு பற்றுவதிலிருந்து தடுக்கப்பட்டுள்ளார்.

5. **தகவுத் திறன்.**—

(i) விண்ணப்பக்காரர் இலங்கையராயிருத்தல் வேண்டும். "இலங்கையர்" என்னும் பதம் வம்சாவழியாக அல்லது பதிவின் மூலம் இலங்கையராயிருத்தல் எனப் பொருள்படும். ஒவ்வொரு விண்ணப்பக்காரரும் தாம் இலங்கையர் என்பதனை நிரூபிக்க வேண்டும்.

(ii) விண்ணப்பக்காரர் 25 வயதுக்கும் 50 வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்;

(iii) ஒவ்வொரு விண்ணப்பக்காரரும் :—

(அ) பதிவு செய்யப்பட்ட வைத்தியத் தொழில்புரிபவராக ; அல்லது

(ஆ) 1941 ம் ஆண்டு 17 ம் இலக்க சுதேச வைத்தியச் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட ஒரு சுதேச வைத்தியராக ; அல்லது

(இ) பிறப்புகள், இறப்புகள், பதிவுச்சட்டம் (110 ம் அத்தியாயம்) பிரிவு 6(3) ன் கீழ் சௌக்கிய சேவை அதிபரால் வழங்கப்பட்ட தகைமைச் சான்றுப் பத்திரம் வைத்திருப்பவராக இருத்தல் வேண்டும்.

6. **பிற தகைமைகள்.**—

(i) அரசாங்க சேவையிலிருக்கும் தகுதியான உத்தியோகத்தர்கள், தங்கள் விண்ணப்பங்களைச் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர் மூலமாக அனுப்ப வேண்டும். ஏற்கெனவே அரசாங்க சேவையில் நிரந்தர உத்தியோகம் பார்ப்பவர்களின் விண்ணப்பங்களை அனுப்பும்போது திணைக்களத் தலைவர்கள், உத்தியோகத்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால், தற்பொழுதுள்ள பதவியிலிருந்து விடுவிக்க முடியும் அல்லது முடியாது என அரசாங்கக் கைநூலிலுள்ள நிர்வாகப் பிரமாணம் 109 ன் கீழ் குறிப்பிட வேண்டும்.

(ii) குறிப்பிடப்பட்ட இடத்தில், நேரத்தில், நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படலாம்; ஆனால் இது தொடர்பாக எவ்வித போக்குவரத்துச் செலவும் வழங்கப்படமாட்டாது.

(iii) தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் ஏற்கெனவே அரசாங்க சேவையிலில்லாதவராயிருந்தால், ஒரு வைத்தியப் பரீட்சையில் சித்தியடையுமாறு கேட்கப்படுவார்.

(iv) ஒரு அபேட்சகர் அரசாங்கத்திடமிருந்து உபகாரச் சம்பளம் பெறுபவராயிருந்தால் அவர்பெறும் உபகாரச் சம்பளத்தொகை குறிப்பிடப்படவேண்டும்;

(v) ஒரு அபேட்சகரைச் சிபாரிசு செய்ய யாராவது விரும்பினால் ஒரு நற்சாட்சிப்பத்திரம் வழங்கப்படுவதன்மூலம் அவ்வாறு செய்யலாம்; ஆனால் ஒரு அபேட்சகரைத் தேர்ந்தெடுப்பது சம்பந்தமாகப் பிரசாரம் செய்யவோ அல்லது செல்வாக்குத் தேடவோ முற்பட்டால் அவ் அபேட்சகரின் விண்ணப்பம் தகுதியற்றதாக்கப்படும்;

(vi) விண்ணப்பத்திற் தரப்பட்ட தகவல்கள் தேர்ந்தெடுக்கப்படுமுன் பொய்யானவையாக அறிய நேரிட்டால் அவரின் விண்ணப்பம் தகுதியற்றதாக்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்டபின் அறிய நேரிட்டால் அவர் நியமனத்திலிருந்து வேலை நீக்கம் செய்யப்படுவதற்குப் பாத்திரராவார்;

(vii) இவ் விளம்பரத்திற்கமைவாக இல்லாத விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்;

(viii) நியமனம் பெற்றவர் 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க உத்தியோக மொழிச் சட்டத்தை அமுல்நடத்துவது சம்பந்தமாக ஏற்கெனவே இயற்றப்பட்டதும், இனிமேல் இயற்றப்படும் எவ்வித விதிகளுக்கும் அமைந்து ஒழுகுமாறு வேண்டப்படுவார்;

(ix) நியமனம் பெறுபவர் அரசாங்க வர்த்தமானியின் பகுதி I, பிரிவு II ல் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவையாளருக்கான ஏனைய சேவை நிபந்தனைகளையும் இது தொடர்பாகப் பார்க்கவும்.

ஜெ. சமரசேகர,
பதிவு காரியகர்த்தர்.

பதிவு காரியகர்த்தர் அலுவலகம்,
கொழும்பு,
1969 ம் ஆண்டு பெப்புருவரி மீ 20 ந் உ.

### கண்டி, கண்டிப் பட்டனப் பகுதியின் பிறப்பு, இறப்பு வைத்தியப் பதிவாளர் பதவிக்கான விண்ணப்பப் பத்திரம்

1. முழுப் பெயரும் (பெரிய எழுத்துக்களில்) வசிக்குமிடமும் :————.

2. (அ) வம்சாவழியாகவா/பதிவுமூலமாகவா இலங்கையர் :————.

(ஆ) பிறந்த இடம் :————.

3. பிறந்த திகதி :————.

4. விவாகம் செய்தவரா/செய்யாதவரா?:————

5. வைத்தியத் தாரதரங்கள் :————.

(வைத்தியத் தொழில் புரிபவராகப் பதிவு செய்யப்பட்ட திகதி அல்லது வருடம் அல்லது சௌக்கிய சேவை அதிபரால் வழங்கப்பட்ட தகுதிச் சான்றுரைப் பத்திரத்தின் திகதி.)

6. பதிவு வேலை சம்பந்தப்பட்ட முன்னைய அனுபவங்கள் : ————.

7. அரசாங்க உபகாரச் சம்பளம் பெறுபவராயிருந்தால் உபகாரச் சம்பளத்தின் தொகையும், தற்போதைய வேலையும் :————.

8. மொழித் தேர்ச்சித் தராதரம் :—
சிங்களம் :————.
தமிழ் :————.
ஆங்கிலம் :————.

9. இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் நற்சாட்சிப்பத்திரங்கள் வழங்கிய இருவரின் பெயரும் விலாசமும் :————.

10. விசேட தகைமைகள் (ஏதாவது இருப்பின்) :————.

இவ்விண்ணப்பப் பத்திரத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானதென்று இத்தால் உறுதிப்படுத்துகிறேன். மேலும் இதில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்களில் ஏதாவதொன்று உண்மையில்லையென்று தேர்ந்தெடுக்கப்படுமுன் அறிய நேரிடின் தகைமை நீக்கம் பெறுவதையும், தேர்ந்தெடுக்கப்பட்டபின் உண்மையில்லையென்று அறிய நேரிடின் நியமனத்திலிருந்து பரிகாரமின்றி வேலைநீக்கம் செய்யப்படுவதையும் நான் நன்கு அறிவேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

பி. கு.—தாரதரப்பத்திரங்கள் (ஏதாவது இருப்பின்) பிரதிகள் மட்டும் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

2-1079—28.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,843

---

## காலி மாவட்டம், நாலுகடவத்தைப் பகுதியில் (தடல்ல கிந்தோட்டைப் பகுதிகள் தவிர) பட்டபெந்தி ஆரச்சி பதவி

காலி மாவட்டம், நாலுகடவத்தைப் பகுதியில் (தடல்ல கிந்தோட்டையைத் தவிர்த்து) பட்டபெந்தி ஆரச்சி பதவிக்காகத் தகுதியுள்ளளோர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் பத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரித்த விண்ணப்பப் பத்திரங்களை 1969 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் காலி நாலுகடவத்தைக் காரியாதிகாரிக்குக் கிடைக்கக் கூடியதாக கீழே காட்டப்பட்டுள்ள அவரின் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

"காரியாதிகாரி, நாலுகடவத்தை, நகரமண்டபம் காலி."

2. இப்பதவிக்குச் சம்பளம் கிடையாது. ஆயினும் வருட முடிவில் அவருக்குப் பாவனைப்படியாக ஒரு சிறு தொகை வழங்கப்படும்.

### கடமைகள்

3. (அ) காலி மாவட்டம், நாலுகடவத்தைப் பிரதேசத்தினுள் (தடல்ல, கிந்தோட்டைப் பகுதிகளைத் தவிர்த்து) கடற்கரையோரங்களில் மணல், சுண்ணம்புக்கல், கருங்கல், கொறல், மிதந்து செல்லும் பொருட்கள், மற்றைய பொருட்கள் ஆதியவற்றைப் பாதுகாத்தல்.

(ஆ) மீன்பிடி வலைகள், ஓடம் ஆதியவற்றைப் பதிவு செய்தல்.

(இ) மீன்பிடித் தகாறுகளைத் தீர்த்து வைத்தல், சட்டத்தை அமுலாக்கல்.

(ஈ) அனுமதிப் பத்திரப் பிரகாரம் மணல் கொண்டு செல்வதைப் பரிபாலித்தல்.

### அவசிய தகுதி

4. (அ) விண்ணப்பப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் திகதிக்கு வயது 30 க்குக் குறையாதிருத்தல் வேண்டும்.

(ஆ) நல்லொழுக்கமும் நற்சுகதேகியுமாயிருத்தல் வேண்டும்.

(இ) காலி மாவட்டம், நாலுகடவத்தை (தடல்ல, கிந்தோட்டையைத் தவிர) எல்லைக்குள் கடற்கரையை அடுத்து வசிப்பவராயிருத்தல் வேண்டும்.

(ஈ) குறைந்த பட்சம் சிங்களம், ஆங்கிலம் அல்லது தமிழ் 7 ஆம் வகுப்புச் சித்தியடைந்தவராயிருத்தல் வேண்டும்.

(உ) இலங்கையராயிருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பப் பத்திரங்களுடன் கீழே காட்டப்பட்டுள்ள அத்தாட்சிப் பத்திரங்களின் பிரதிகளையும் அனுப்புதல் வேண்டும்.

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம்

(ஆ) கல்வி அத்தாட்சிப் பத்திரம்

(இ) நல்லொழுக்கம் சம்பந்தமாகச் சமீபத்தில் பெற்றுக் கொண்ட இரு அத்தாட்சிப் பத்திரங்கள்.

6. விண்ணப்பப் பத்திரம் கிடைத்தமை அறிவிக்கப்பட மாட்டாது.

பி. ஏ. ரி. குணசிங்க,
அரசாங்க அதிபர்,
காலி மாவட்டம்.

கச்சேரி, காலி.
1969. 2. 10 ஆந் திகதி.

### மாதிரி விண்ணப்பப் பத்திரம்

### காலி மாவட்டம் நாலுகடவத்தைப் பகுதி எல்லைக்குள் (தடல்ல, கிந்தோட்டையைத் தவிர்த்து) பட்டபெந்தி ஆரச்சி பதவி

1. விண்ணப்பதாரரின் பெயரும் விலாசமும் (தெளிவான எழுத்தில்) ————
(அ) முதற் பெயர் ————
(ஆ) மற்றைய பெயர் ————

2. நிரந்தர வசிப்பிடமும் அங்கு வசித்த காலமும் ————

3. (அ) 1969.3.31 திகதிக்கு வயது வருடம் மாதம் நாள் ————
(ஆ) பிறந்த திகதியும் இடமும் :—
பிறந்த திகதி ————
பிறந்த இடம் ————

4. விவாகமானவரா இல்லையா எனும் விபரம் ————

5. கல்வித் தராதரம் ————

6. தற்போதைய தொழில் ————

7. கடன்காரரா? அவ்வாறாயின் அதன் விபரம் ————

8. தனக்குச் சொந்தமான சொத்துக்களும் அதன் அளவும் ————

9. விண்ணப்பதாரி ஏதாவதொரு குற்றத்துக்காக நீதிமன்ற மொன்றில் தண்டனை பெற்றிருக்கிறாரா ? ————.

10. இப்பதவிக்கான அனுபவம் ————

11. இப்பதவி சம்பந்தமாக வேறு ஏதும் விபரங்கள் ————

12. இதற்கு முன்னர் உத்தியோகம் பார்த்ததுண்டா? அவ்வாறாயின் அதன் விபரம் ————

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி ————

விலாசம் ————

2-1082—28.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,843

## சௌக்கியப் பகுதி

### பொதுச்சௌக்கிய மருத்துவிச்சிமார் பதவிகளுக்கு நியமனம்

சௌக்கிய சேவைப் பகுதியில் உள்ள பொதுச்சௌக்கிய மருத்துவிச்சிமார் பதவிகளை நிரப்புவதற்கு, 18 மாதப் பயிற்சிபெற்ற மருத்துவிச்சிமாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழ்க்காணும் மாதிரிப் பத்திரத்தில் உள்ளபடி விண்ணப்பங்களைத் தயாரித்து "சௌக்கியசேவை அதிபதி, தபாற்பெட்டி இலக்கம் 500, கொழும்பு" என்று விலாசமிட்டு, பதிவுசெய்யப்பட்ட தபால் மூலம் 1969 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆந் திகதிக்குப் பிந்தாமல் கிடைக்கத்தக்கதாக அவற்றை அனுப்புதல்வேண்டும். விண்ணப்பங்களை அனுப்பும் காகித மேனுறையின் இடது மேல்மூலையில், "பொதுச் சௌக்கிய மருத்துவிச்சிமார் பதவிகளுக்கான விண்ணப்பம்" என எழுதப்படல்வேண்டும்.

**2. சம்பள விகிதங்களும், சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவிகளுக்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கும் சம்பளம் வருமாறு.—ஆரம்பச் சம்பளம் வருடம் ஒன்றுக்கு ரூபா 750. இதில் ரூபா 42 வீதம் 15 சம்பள ஏற்றங்கள் அளிக்கப்பட்டபின் இறுதி வருட அடிப்படைச் சம்பளம் ரூபா 1380 ஆக இருக்கும். 1044 ரூபாவையும், 1170 ரூபாவையும் பெறுமுன்பு வினைத்திறமைகாண் தடைகள் உண்டு.

**3. சேவை நிபந்தனைகள்.**—இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளம் உள்ளதுமாகும். எனினும், முதல் நியமனம் பெற்றதும் அரசாங்கசேவைச் சகாய நிதிக்குப் பணஞ்செலுத்திவரவேண்டும். ஆனால், முதல் பத்துவருட சேவையைப் பூர்த்திசெய்ய முன்னர், அவர்கள் விரும்பினால் 1957.4.29 ஆம் தேதியின், 372 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கைப்படி இளைப்பாற்றிச் சம்பளத்திட்டத்தில் சேரலாம். தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் முதல் மூன்று ஆண்டுகளுக்குத் தகுதிகாண் நிலையிலிருப்பர். தேர்ந்தெடுக்கப்படுவோர் இலங்கையில் எப்பகுதியிலாவது சேவைசெய்யத் தயாராயிருத்தல் வேண்டும். அன்றியும் அவர்கள் நியமனக் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கும் நிபந்தனைகளுக்கு அமைவாக ஒழுகுதலும் அவசியம். தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் முதல் நியமனத் தேதியிலிருந்து மூன்று ஆண்டு காலங்களுக்குக் குறித்த பகுதியில் (திணைக்களத்தில்) சேவை செய்வதென உடன்படிக்கை செய்வதற்குத் தயாராகவுமிருத்தல் வேண்டும்.

**4. தேவையான தராதரங்கள்.**—1969 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆந் திகதியன்று 35 வயதுக்கு மேற்படாதவராயிருத்தல் வேண்டும்.

(ஆ) பதிவுசெய்யப்பட்ட மருத்துவிச்சியாக இருத்தல் வேண்டும். மருத்துவிச்சிமாராகச் சேவையிலீடுபட்டவர்களுக்கு விசேட சலுகை காட்டப்படும்.

**5. உடைகள் (யூனிபோம்).**—கடமையாற்றும் நேரங்களில் அணிவதற்குக் கோலஉடைகள் (யூனிபோம்) வழங்கப்படும்.

6. விண்ணப்பங்கள் எனது சொந்த விலாசத்திற்கோ, இப்பகுதியிலுள்ள வேறு எந்த உத்தியோகத்தரின் சொந்த விலாசத்திற்கோ அனுப்பப்படக்கூடாது.

7. மேற்கூறிய தகுதிகளைக் கொண்டிராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அங்ஙனம் நிராகரிக்கப்படுவதற்கான காரணம் விண்ணப்பகாரர்களுக்குத் தனித்தனியே அறிவிக்கப்படமாட்டா.

8. கேட்கப்பட்டிருக்கும் சாட்சிப்பத்திரங்களின் மூலப்பிரதிகள் விண்ணப்பத்துடன் அனுப்பப்படக்கூடாது. அவற்றின் நகல்கள் மாத்திரமே விண்ணப்பத்துடன் அனுப்பப்படவேண்டும். அத்தகைய சாட்சிப் பத்திரங்களின் நகல்களோ, மூலப்பிரதிகளோ (அனுப்பப்பட்டிருப்பின்) திருப்பி அனுப்பப்படமாட்டாது.

9. இந்த வர்த்தமானப் பத்திரிகையின் (கசெற்றின்) முதலாம் பாகம் இரண்டாம் பிரிவின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவி நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்வையிடும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பி. வி. மகாதேவா,
சௌக்கிய சேவை அதிபதிக்காக.

கொழும்பு,
1969 ம் ஆண்டு பெப்புருவரி மீ 27 ந உ.

### மாதிரி விண்ணப்பப் பத்திரம்

1. முழுப்பெயர் : ————.
(தனித்தனி எழுத்துக்களில்)

2. விலாசம் : ————.

3. பிறந்த திகதியும், வருடமும் : ————.
(பிறப்புப் பத்திரத்தின் நகல் இணைக்கப்படுதல் வேண்டும்) (உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான பிரமாணத் தொகுப்பு நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட ஞானஸ்நானப் பத்திரம் அல்லது பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

4. எந்த தேசப் பிரசை : ————.

5. விவாகமானவரா ? விவாகமாகாதவரா ? : ————.
(அ) கன்னிப் பெயர் : ————.
(ஆ) கணவனின் தொழிலும் வேலை செய்யும் இடத்தின் பெயரும்: ————.
(இ) பிள்ளைகளின் தொகை : ————.
மூத்தபிள்ளையின் வயது : ————.
இளையபிள்ளையின் வயது : ————.
(விவாகமான விண்ணப்பகாரர்கள் தங்கள் கணவரிடமிருந்து தாம் இப்பகுதியில் மருத்துவிச்சிமாராக நியமனஞ் செய்யப்படுவதையிட்டு அவர்களுக்கு எந்தவிதமான ஆட்சேபனையுமில்லையென்ற விருப்பத்தைக்காட்டும் கடிதமொன்றை வாங்கிச் சமர்ப்பித்தல் வேண்டும்).

6. மருத்துவிச்சிமார்களுக்குரிய இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்த திகதி : ————.
பயிற்சிபெற்ற தாபனத்தின் பெயர் : ————.
1. தாபனத்தின் பயிற்சிபெற்ற இடம் : ————.
2. வெளிக்கருமப் பயிற்சிபெற்ற இடம் : ————
(பெற்ற சாட்சிப் பத்திரத்தின் நகலை இணைக்குக)

7. **அண்மையில் பெற்ற இரு நற்சாட்சிப் பத்திரங்களின் நகல்கள் இணைக்கப்படவேண்டும்.**

8. கீழ்க்கண்ட மொழிகளில் அறிவு உண்டா ?

| | வாசினை | எழுத்து | பேச்சு |
|---|---|---|---|
| சிங்களம் | .......... | .......... | .......... |
| ஆங்கிலம் | .......... | .......... | .......... |
| தமிழ் | .......... | .......... | .......... |

9. முன்பு அரசாங்கத்தின்கீழ் ஏதாவது சேவையில் இருந்திருந்தால் வகித்த பதவிகளின் பெயர்களும், சேவையிலிருந்த திகதிகளும் : ————.

10. பதிற்கடமை (றிலீவ்) பொதுச் சௌக்கிய மருத்துவிச்சியாகக் கடமைசெய்ய அழைக்கப்பட்டால் அதற்கு உடன்படுகிறீரா ? : ————.

11. மேற்குறிக்கப்பட்டுள்ள சேவை நிபந்தனைகளுக்கு உடன்படுகிறீரா : ————.

12. நான் முன்பு ஒருபோதும் அரசாங்க சேவையிலிருந்து தகுயற்ற தன்மைக்காக விலகவோ, விலக்கப்படவோ இல்லையென்றும், நீதிமன்றத்தில் எந்தவிதமான குற்றச்சாட்டுகளுக்காகத் தண்டிக்கப்படவில்லையென்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இவை சம்பந்தமான பொய்யான உறுதிமொழிக்குத் தண்டனையாக உடனடியாகச் சேவையிலிருந்து விலக்கப்படுவேன் என்பதையும் நான் உணருகிறேன்.

............
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி : ........

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### அரசினர் மகா வித்தியாலயங்களிலுள்ள II, III ந் தர விசேட பதவிகள்

அரசினர் சிங்கள/தமிழ், முஸ்லிம் மகா வித்தியாலயங்களிலுள்ள II ந், III ந் தர விசேட பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன. கீழ்க்காணும் மாதிரிப் படிவத்துக்கு அமைய சரியான முறையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு "நிரந்தரக் காரியதரிசியும் மகா வித்தியாதிபதியும் (பாடசாலைகள் நிருவாகக் கிளை), கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2" என்ற விலாசத்தில் 1969 ம் ஆண்டு மார்ச் மாதம் 14 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "II ந்/III ந் தர சிங்கள/தமிழ் மொழி மூல விசேட பதவிகள்" என உரிய முறையில் தெளிவாக அடையாளமிடப்பட வேண்டும் (பொருத்தமற்றவற்றைக் கீறிவிடுக).

வெளிநாடுகளிலுள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை 21.3.69 அன்று அல்லது அதற்கு முன் இவ்வலுவலகத்துக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்ப வேண்டும்.

(i) வெளிநாடுகளிலுள்ள அபேட்சகர்கள், விரும்பினால், தமது விண்ணப்பங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, நிரந்தரக் காரியதரிசிக்கும் மகா வித்தியாதிபதிக்கும் அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம்.

(ii) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல் நலமுடையவர்களாயிருக்கின்றார்களாவென்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2\. **வயதெல்லை.**—விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியன்று விண்ணப்பதாரிகள் 30 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்பட்டவராயும் இருக்க வேண்டும். (ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ளவர்களுக்கு வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது).

3\. **நியமன நியதிகள்.**—

(i) இப்பதவிகள் நிரந்தரமானவையும் பாடசாலை ஆசிரியர் இளைப்பாற்றுச் சம்பள விதிகளின் கீழ் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையனவையுமாகும். நியமதாரி ஒருவர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படுமுன் இளைப்பாற்றுச் சம்பளப் பிரமாணக் குறிப்புகளின் கீழ் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடைய ஆசிரிய பதவியை வகித்தவராயின், அவர் வகிக்கும்வரை இப்பதவி இளைப்பாற்றுச் சம்பளப் பிரமாணக் குறிப்புகளின் கீழ் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதாகப் பிரகடனஞ் செய்யப்படும்.

(ii) தெரிவு செய்யப்படுவோர், ஒரு வருட காலத்துக்குப் புதிய பதவியில் பதில் கடமை புரிபவராக நியமிக்கப்படுவார்கள். பதவியில் உறுதிப்படுத்தப்பட்டதும் பதவி உயர்ச்சி பெற்ற திகதியிலிருந்து அவர்களுக்குரிய சம்பள விகிதம் நிதி விதிகளுக்கிணங்க வழங்கப்படும்.

(iii) தெரிவு செய்யப்படுபவர், அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை நடைமுறையில் கொண்டுவருதற்கு, குறிப்பாக 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்தும் பொருட்டு, ஏற்கனவே ஆக்கப்பட்ட அல்லது இனிமேல் ஆக்கப்படும் விதிகளுக்கமைய ஒழுக வேண்டும்.

(iv) நியமதாரி தீவின் எப்பகுதியிலும் கடமை புரிய வேண்டும்.

(v) விண்ணப்பதாரிகள் உடல் தகுதியுடையவராயும் நல்லொழுக்கம் உடையவராயும் இருக்க வேண்டும்.

4\. **சம்பள விகிதங்கள்.**—இப்பதவிகளுக்குரிய சம்பள அளவுத் திட்டங்கள் பின்வருமாறு :—

(i) III ந் தர விசேட பதவிகள்—ரூ. 2,820—120—180—ரூ. 5,340 வருடாந்தம்.

(ii) II ந் தர விசேட பதவிகள்—ரூ. 3,420—120—180—240—ரூ. 5,820 வருடாந்தம்.

5\. **கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வருவனவற்றை நிரூபித்தற்குத் திருப்திகரமான சான்று காட்ட வேண்டும் :—

14.3.69 அன்று விண்ணப்பதாரிகள் 30 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்பட்டவராயும் இருக்க வேண்டும். (ஏற்கனவே அரசினர் சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது).

**III ந் தர விசேட பதவிகளுக்கு** விண்ணப்பிப்பவர்கள்.—

(i) பயிற்றப்பட்ட பட்டதாரியாக, அல்லது சமமான தகைமைகள் உடையவராக, அல்லது

(ii) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழக (1 ம் வகுப்பு அல்லது 2 ம் வகுப்பு) சிறப்புப் பட்டதாரியாக, அல்லது சமமான தகைமைகள் உடையவராக, அல்லது

(iii) பட்டம் பெற்றபின், 2 வருட படிப்பித்தல் அனுபவம் பெற்ற, அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகப் பட்டதாரியாக, அல்லது சமமான தகைமைகள் உடையவராக, அல்லது

(iv) 5 வருடப் படிப்பித்தல் அனுபவம் பெற்ற, அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழக ப்பட்டதாரியாக, அல்லது சமமான தகைமைகள் உடையவராக, அல்லது

(v) பயிற்சி பெற்ற பின், 'ஆசிரியராகக் குறைந்த பட்சம் 5 வருட சேவை பூர்த்தி செய்த 1 ம் வகுப்புப் பயிற்றப்பட்ட ஆசிரியராக,' அல்லது

(vi) 1 ம் வகுப்பு ஆசிரியர் தராதரப் பத்திரம் பெற்றபின் 5 வருடம் சேவை புரிந்த (சிங்கள/தமிழ்/ஆங்கில) ஆசிரியர் தராதரப் பத்திரம் பெற்ற ஆசிரியராக, அல்லது

(vii) ஆசிரியராக 5 வருட சேவை பூர்த்தி செய்தவரும் உயர்தர, பயிற்சி பெற்றவருமான 1 ம் வகுப்பு (சிங்கள/தமிழ்) பயிற்றப் பட்ட ஆசிரியராக, அல்லது

(viii) ஆசிரியர் தராதரப் பத்திரம் பெற்ற ஆசிரியராகக் குறைந்த பட்சம் 10 வருடப் படிப்பித்தல் அனுபவம் பெற்றுள்ள (சிங்கள/தமிழ்/ஆங்கில) பயிற்றப்பட்ட ஆசிரியராக இருக்க வேண்டும்.

**II ந் தர விசேட பதவிகளுக்கு** விண்ணப்பிப்பவர்கள்.—

(i) பயிற்றப்பட்ட பட்டதாரியாக, அல்லதுச மமான தகைமைகள் உடையவராக, அல்லது

(ii) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழக (1 ம் வகுப்பு அல்லது 2 ம் வகுப்பு) சிறப்புப் பட்டதாரியாக, அல்லது சமமான தகைமைகள் உடையவராக, அல்லது

(iii) பட்டம் பெற்றபின், குறைந்த பட்சம் 3 வருட படிப்பித்தல் அனுபவம் பெற்ற அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகப் பட்டதாரியாக, அல்லது சமமான தகைமைகள் உடையவராக, அல்லது

(iv) பயிற்சி பெற்றபின் குறைந்த பட்சம் 7 வருடப் படிப்பித்தல் அனுபவம் பெற்ற உயர்தர பயிற்றப்பட்ட ஆசிரியராக, அல்லது

(v) ஆசிரியராகக் குறைந்த பட்சம் 15 வருட அனுபவம் பெற்ற 1 ம் வகுப்பு (சிங்கள/தமிழ்) பயிற்றப்பட்ட ஆசிரியராக, அல்லது

(vi) III ந் தர அதிபராக 5 வருட அனுபவம் பெற்றுள்ள III ந் தர அதிபராக, அல்லது

(vii) அத்தரத்தில் 10 வருட சேவை புரிந்த III ந் தர விசேட பதவி வகிப்பவராக இருக்க வேண்டும்.

**குறிப்பு 1.**—விண்ணப்பதாரிகள் சிங்களத்தில்/தமிழில் சிறந்த அறிவு பெற்றிருக்க வேண்டும். தெரிவு செய்யப்படுபவர்கள், ஏற்கனவே சமமான அல்லது உயர்ந்த தகைமைகள் பெற்றிராவிடின், நியமனத் திகதியிலிருந்து 3 வருட காலத்துக்குள் க.பொ.த. (சாதாரண தர) பத்திரப் பரீட்சையில் சிங்கள/தமிழ் மொழியில் அல்லது இலக்கியத்தில் சித்தியடைய வேண்டும். சிங்களத்தில்/தமிழில் வேண்டிய தகைமையைப் பெறுதற்கு 3 வருடத்துக்கு மேலதிகமாக எடுக்கப்படும் காலத்தில் சம்பள உயர்ச்சிப் பணம் நிறுத்தி வைக்கப்படும்.

**குறிப்பு 2.**—பயிற்றப்பட்ட பட்டதாரியாக/பட்டதாரியாக/உயர்தர பயிற்றப் பட்ட ஆசிரியராக/சிங்கள அல்லது தமிழ் பயிற்றப்பட்ட ஆசிரியராகப் புரிந்த சேவைக் காலத்தைக் கணிக்கும் பொழுது அவர் பெற்றுள்ள படிப்பு லீவு அல்லது சம்பளமற்ற லீவு சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது.

**குறிப்பு 3.**—தெரிவு செய்யப்படுபவர்கள் சாதாரணமாக மகா வித்தியாலயங்களில் பிரதி அதிபர்களாக அல்லது பிரிவுத் தலைவர்களாக நியமிக்கப்படுவார்கள். விசேட பதவி வகிப்பவர்கள் பிரிவுத் தலைவர்களாக நியமிக்கப்படுமிடத்துத் பொதுவாகப் பின்வரும் பாடத் துறைகளின் வேலைகளையும் கவனிக்க வேண்டும் :—

(i) மொழியும் சமயப் படிப்புகளும்.

(ii) சமூக விஞ்ஞானம் (சரித்திரம், புவியியல், ஆட்சியியல், பொருளியல், குடியியல் ஆதியன).

(iii) கணிதமும் விஞ்ஞானமும்.

(vi) தொழில்நுட்ப, வர்த்தக, இரசஞ்ஞான படிப்புகள்.

**குறிப்பு 4.**—பதவியுயர்ச்சி அளிக்கப்படுதற்குத் தெரிவு செய்யப்பட்டு, குறித்த ஒரு பாடசாலைக்குக் கொடுக்கப்படும் ஒரு நியமனத்தை ஏற்க மறுக்கும் ஒருவரின் பதவி உயர்ச்சி இக்காரணத்தைக் கொண்டு நிராகரிக்கப்படும்.

6. அபேட்சகர்கள், வேண்டப்படுமிடத்து, பின்வரும் சாதனங்கள் எவற்றையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (மு. கு.—ஞானஸ்நான பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்துக்கெனக் கொடுபடும் பிறப்புப் பதிவுப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா).

(ஆ) பட்டப் பரீட்சைத் தராதரப் பத்திரம் அல்லது ஆகக்கூடிய கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) உயர் தொழில் தராதரப் பத்திரம்.

(ஈ) சிங்களத்தில்/தமிழில்/ஆங்கிலத்தில் சித்தி எய்திய ஆகக்கூடிய பரீட்சைப் பத்திரம்.

குறிப்பு (i) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

7. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான யாதேனும் கடிதங்களும் " நிரந்தரக் காரியதரிசியும் மகா வித்தியாதிபதியும் (பாடசாலைகள் நிர்வாகக் கிளை), கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2 " என விலாசமிடப்பட்டே அனுப்பப்பட வேண்டும். அமைச்சிலுள்ள எவ்வுத்தியோகத்தரின் பெயருக்கும் இவை அனுப்பப்படலாகா.

8. ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் ஒவ்வொரு பதவிக்கும் புறம்பான விண்ணப்பங்களை அனுப்பவேண்டும்.

9. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ம் பாகம், II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

10. விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி அறிவிக்கப்படும். சாதாரண தபால் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்படாவிடின் அதற்கான பொறுப்பை இவ்வமைச்சு ஏற்றுக் கொள்ளமாட்டாது. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்தற்கான கடைசித் திகதிக்குப் பின் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

11. 1968 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29 ஆந் திகதிய 14,830 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் I ம் பகுதி II ம் பிரிவில் பதில் நிரந்தரக் காரியதரிசியாலும் மகா வித்தியாதிபதியாலும் வெளியிடப்பட்ட விளம்பரத்துக்கமைய ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் மறுபடியும் விண்ணப்பிக்க வேண்டியதில்லை.

டீ. ஜீ. தயரத்ன,
நிரந்தரக் காரியதரிசியும்
மகா வித்தியாதிபதியும்.

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1969 ம் ஆண்டு பெப்ருவரி மீ 20 ந வ.

## மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரசினர் மகா வித்தியாலயங்களிலுள்ள II ந்/III ந் தர விசேட பதவிகளுக்கான விண்ணப்பம்**

1. முழுப்பெயர் : ————.
2. விலாசம் : ————.
3. பால் : ————.
4. விவாகம் செய்தவரா, செய்யாதவரா ? : ————.
5. (i) விவாகம் செய்தவராயின் வாழ்க்கைத் துணைவர் உத்தியோகத்தில் இருக்கிறாரா ? : ————.
(ii) அவர் உத்தியோகத்திலிருப்பின் உத்தியோகம் பற்றிய விபரங்கள் : ————.
6. ஆசிரியராகப் பதிவிலக்கம் : ————.
7. பிறந்த திகதி : ————.
8. பின்வருவோர் பிறந்த இடம் : —
(அ) விண்ணப்பதாரி : ————.
(ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் : ————.
(இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் : ————.
(ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பூட்டன் : ————.
9. வம்சாவழி காரணமாகவா பதிவு காரணமாகவா நீர் இலங்கைப் பிரசை : ————.
10. சமயம் : ————.
11. கல்வித் தகைமைகள்—
(அ) பட்டம் : ————.
(ஆ) பல்கலைக் கழகம் : ————.
(இ) வருடம் : ————.
(ஈ) வகுப்பு அல்லது பிரிவு : ————.
(உ) பட்டப் பரீட்சைக்கு எடுத்த பாடங்கள் : ————.
12. உயர்தொழில் தகைமைகள் : ————.
(அ) பயிற்றப்பட்ட ஆசிரியராயின்—,
(i) ஆசிரியர் கலாசாலை : ————.
(ii) பயிற்சிக் காலம் : ————.
(iii) தராதரப் பத்திரத்தின் இலக்கமும் அது காரியப்படும் திகதியும் : ————.
(iv) 1 ம் வகுப்புக்கு உயர்த்தப்பட்ட திகதி
(ஆ) பயிற்றப்படாத தராதரப் பத்திரம் பெற்றவராயின்,
(i) தராதரப் பத்திரத்தின் இலக்கமும் அது காரியப்படும் திகதியும் : ————.
(ii) 2 ம் வகுப்புக்கு உயர்த்தப்பட்ட திகதி : ————.
(iii) 1 வகுப்புக்கு உயர்த்தப்பட்ட திகதி : ————.
(இ) தலைமை ஆசிரியராயின் வகிக்கும் தரமும் அத்தரத்துக்கு நியமனம் பெற்ற திகதியும் : ————.
(ஈ) விசேட பதவி வகிப்பவராயின் அதன் தரமும் அத்தரத்துக்கு நியமிக்கப்பட்ட திகதியும் : ————.
(உ) அதிபராயின் தரமும் அத்தரத்துக்கு நியமிக்கப்பட்ட திகதியும் : ————.
13. ஏனைய தராதரங்கள் (எவையேனும் இருப்பின்) :————.
14. கடந்த 5 வருட காலத்தில் தொழிற் தராதரப் பத்திரத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட புறக்குறிப்புகள் : ————.
15. சிங்களத்தில்/தமிழில் பெற்றுள்ள அறிவு : ————.
16. சேவை பற்றிய விபரங்கள் :

| பாடசாலைப் பெயர் | தொடக்கம் | வரை | வகித்த பதவி |
|---|---|---|---|
| | | | |

17. (i) படிப்பு லீவு சம்பந்தமான விபரங்கள் (காலங்கள் உட்பட) : ————.
(ii) கடந்த 12 வருட காலங்களுள் எடுத்த சம்பளமற்ற லீவு (எடுத்திருப்பின்) பற்றிய விபரங்கள் : ————.
18. (i) வித்தியாதிபதியிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பாராட்டுக் குறிப்புகள் பற்றிய விபரங்கள் : ————.
(ii) அரசினரின் கீழ் சேவை செய்யும் காலத்தில் தண்டனை யாதேனும் பெற்றிருப்பின் அது பற்றிய விபரங்கள் : ————.
19. அரசினர் வர்த்தமானி அறிவித்தலின் (5) ம் பந்தியில் கொடுபட்டுள்ள கல்வித் தகைமைகளுள் எதற்கமைய நீர் விண்ணப்பித்தற்குத் தகுதி பெறுகிறீர் ? : ————.
20. வேறு யாதேனும் விசேட உரிமைகள் : ————.

மேலே நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் சரியானவையெனவும் செம்மையானவெனவும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன். இவ் விபரங்களில் எவையேனும் உண்மையற்றவையென அல்லது பிழையானவையென நான் தெரிவு செய்யப்படுதற்கு முன் காணப்படின் தகுதியற்றவராகக்கப்படுவேன் எனவும் தெரிவு செய்யப்பட்டபின் காணப்படின் நஷ்ட ஈடின்றி சேவையிலிருந்து விலக்கப்படுவேன் எனவும் அறிவேன்.

————,
கையொப்பம்.

திகதி : ————.

2-1052—28.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,843.

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும்

திறைசேரி இல. : 1/83/17 (ஜி)

## மாற்றத்துக்குரிய சுருக்கெழுத்தாளர் சேவையின் கீழ்த்தரத்திலுள்ள சுருக்கெழுத்தாளர்களுக்கான முதலாம் வினைத் திறமைகாண் தடைப்பரீட்சை (சிங்களம்)—ஒற்ரோபர், 1968

1966 ஒற்ரோபர் 23 ஆந் தேதிய இல. 134 (ஜி) கொண்ட திறைசேரிச் சுற்றறிவிப்பு நிருபத்திற்கிணங்க முதலாம் வினைத்திறமைகாண் தடைக்கு மேலாகப் பதவியுயர்த்துவதற்கென 1968, ஒற்ரோபர் மாதம் 19 ஆந் தேதி நடாத்தப்பட்ட தகைமைப் பரீட்சையில் மாற்றத்துக்குரிய சுருக்கெழுத்தாளர் சேவையின் கீழ்த்தரத்திலுள்ள சுருக்கெழுத்தாளர் எவரும் சித்தியடையவில்லையென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

பொதுத் திறைசேரி, கொழும்பு,
1969, சனவரி மாதம் 31 ஆந் தேதி.

பீ. டி. உடுவெல,
திறைசேரி இணைப் பிரதிச் செயலாளர்.

2–940/1—28.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,843

---

திறைசேரி இல. : 1/83/17 (ஜி)

## மாற்றத்துக்குரிய சுருக்கெழுத்தாளர் சேவையின் கீழ்த்தரத்திலுள்ள சுருக்கெழுத்தாளர்களுக்கான இரண்டாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை (சிங்களம்)—ஒற்ரோபர், 1968

1966 ஒற்ரோபர் 23 ஆந் தேதிய இல. 134 (ஜி) கொண்ட திறைசேரிச் சுற்றறிவிப்பு நிருபத்திற்கிணங்க ஆண்டுக்கு 2,940/– ரூபாவிற்கு முன்னருள்ள இரண்டாம் வினைத்திறமைகாண் தடைக்கு மேலாகப் பதவியுயர்த்துவதற்கென 1968 ஆம் ஆண்டு ஒற்ரோபர் மாதம் 19 ஆந் தேதி நடாத்தப்பட்ட தகைமைப் பரீட்சையில் மாற்றத்துக்குரிய சுருக்கெழுத்தாளர் சேவையின் கீழ்த் தரத்திலுள்ள கீழ்க்குறிப்பிட்டுள்ள சுருக்கெழுத்தாளர்கள், அவர்களின் பெயர்களுக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களில் சித்தியடைந்துள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| பெயர் | திணைக்களம் | பாடங்கள் |
|---|---|---|
| அபயபால, கே. ஜி. எம். எம். (திருவாட்டி) | போக்குவரத்து அமைச்சு | சுருக்கெழுத்து, தட்டெழுத்து |
| அமரசிங்க, என். எ. | கச்சேரி, குருநாகல் | சுருக்கெழுத்து, தட்டெழுத்து |
| அன்விஸேனை, எச். எ. (செல்வி) | கூட்டுநீதவான் நீதி மன்றம், கொழும்பு 1 | சுருக்கெழுத்து, தட்டெழுத்து |
| ஆரியதாச, எ. எல். | கைத்தொழில், கடற்றொழில் அமைச்சு | சுருக்கெழுத்து, தட்டெழுத்து |
| கேரத், பி. (திருவாட்டி) | அஞ்சல், தொலைச்செய்திப் போக்குவரத்து | சுருக்கெழுத்து, தட்டெழுத்து |
| த சில்வா, டி. சி. யு. (திருவாட்டி) | கிராம அபிவிருத்தி சிறு கைத்தொழில் | சுருக்கெழுத்து, தட்டெழுத்து |
| த சில்வா, எஸ். (செல்வி) | கல்வி, பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு | சுருக்கெழுத்து, தட்டெழுத்து |
| தருமசேன, எம். டி. பீ. (திருவாட்டி) | உண்ணுட்டு அரசிறை | சுருக்கெழுத்து, தட்டெழுத்து |
| தொலவத்த, டி. ரி. (திருவாட்டி) | பொதுத்திறைசேரி | சுருக்கெழுத்து, தட்டெழுத்து |
| கமகே, சி. ஜி. | தொழில்முறை மன்றம், காலி | சுருக்கெழுத்து, தட்டெழுத்து |
| குணசேகர, வி. எ. (செல்வி) | இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாடு | சுருக்கெழுத்து, தட்டெழுத்து |
| குணவர்த்தன, எச். பீ. | கல்வி, பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு | சுருக்கெழுத்து, தட்டெழுத்து |
| ஜினதாச, பீ. (திருவாட்டி) | உண்ணுட்டு அரசிறை | சுருக்கெழுத்து, தட்டெழுத்து |
| கேமச்சந்திர, எச். டி. என். (திருவாட்டி) | காணி அபிவிருத்தி | சுருக்கெழுத்து, தட்டெழுத்து |
| கெற்றியாராச்சி, பி. எல். (திருவாட்டி) | உண்ணுட்டு அரசிறை | சுருக்கெழுத்து, தட்டெழுத்து |
| கெற்றிகொட, எஸ். (திருவாட்டி) | தொழில் | சுருக்கெழுத்து, தட்டெழுத்து |
| கருணரத்ன, எம். பி. ஆர். எஸ். (திருவாட்டி) | சட்டத் தயாரிப்பாளர் | சுருக்கெழுத்து, தட்டெழுத்து |
| கருணசீலி, கே. கே. (செல்வி) | கல்வி, மாத்தறை | சுருக்கெழுத்து, தட்டெழுத்து |
| கருணவதி, டபிள்யு. எச். | கிராம அபிவிருத்தி, சிறு கைத்தொழில் | சுருக்கெழுத்து, தட்டெழுத்து |
| கருணரத்ன, டபிள்யு. பீ. எம். | நீதவான் நீதிமன்றம், சிலாபம் | சுருக்கெழுத்து, தட்டெழுத்து |
| கொடிகார, டி. (திருவாட்டி) | கச்சேரி, மாத்தறை | சுருக்கெழுத்து, தட்டெழுத்து |
| லெனேரா, ஆர். எ. பீ. (செல்வி) | நீதி அமைச்சு | சுருக்கெழுத்து, தட்டெழுத்து |
| மெத்தானந்த, பீ. (திருவாட்டி) | தேசியமய சேவைகள் அமைச்சு | சுருக்கெழுத்து, தட்டெழுத்து |
| பெரேரா, எம். பீ. | பொதுத் திறைசேரி | சுருக்கெழுத்து, தட்டெழுத்து |
| பெரேரா, டபிள்யு. எச். | கல்வி, பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு | சுருக்கெழுத்து, தட்டெழுத்து |
| பீரிஸ், எ. வி. | புகைவண்டி | சுருக்கெழுத்து, தட்டெழுத்து |
| பியதாச, ஜி. டி. என். (திருவாட்டி) | உணவு | சுருக்கெழுத்து, தட்டெழுத்து |
| பொன்னவில, வி. எ. | தகவல் | சுருக்கெழுத்து, தட்டெழுத்து |
| பிரேமலதா, என். டி. எம். (திருவாட்டி) | உண்ணுட்டு அரசிறை | சுருக்கெழுத்து, தட்டெழுத்து |
| றணதுங்காராச்சி, வீ. | காணி, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சு | சுருக்கெழுத்து, தட்டெழுத்து |
| சூரியாராச்சி, டி. எச். (திருவாட்டி) | கல்வி, பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு | சுருக்கெழுத்து, தட்டெழுத்து |
| வீரசேகர, இ. எ. டி. ஜி. | கசசேரி, அனுராதபுரம் | சுருக்கெழுத்து, தட்டெழுத்து |
| விமலசேன, எஸ். (திருவாட்டி) | உடனல சேவைகள் | சுருக்கெழுத்து, தட்டெழுத்து |
| விதாரன, டி. (செல்வி) | கச்சேரி, அம்பாறை தோட்டை | சுருக்கெழுத்து, தட்டெழுத்து |

பொதுத் திறைசேரி, கொழும்பு,
1969, சனவரி மாதம் 31 ஆந் தேதி.

பீ. டி. உடுவெல,
திறைசேரி இணைப் பிரதிச் செயலாளர்.

2–940/2—28.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,843

திறைசேரி இல. : 1/83/18 (ஜி)

## மாற்றத்துக்குரிய சுருக்கெழுத்தாளர் சேவையில் (கீழ்த்தரம்) உள்ள சுருக்கெழுத்தாளர்களுக்கான முதலாம் வினைத்திறமை காண் தடைப் பரீட்சை (ஆங்கிலம்) – ஒற்றோபர் 1968

1966 ஒற்றோபர் 23 ஆந் தேதி இல. 134 (ஜி) கொண்ட திறைசேரி சுற்றறிவிப்பு நிருபத்திற்கிணங்க ஆண்டுக்கு 2,340 ரூபாவிற்கு முன்னருள்ள முதலாம் வினைத்திறமைகாண் தடைக்கு மேலாகப் பதவியுயர்த்துவதற்கென 1968, ஒற்றோபர் 12 ஆந் தேதி நடாத்தப்பட்ட தகைமைப் பரீட்சையில் மாற்றத்துக்குரிய சுருக்கெழுத்தாளர் சேவையின் (ஆங்கிலம்) கீழ்த்தரத்திலுள்ள கீழ்க்குறிப்பிட்டுள்ள சுருக்கெழுத்தாளர்கள் சித்தியடைந்துள்ளார் களென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| பெயர் | திணைக்களம் |
|---|---|
| பூரு, ரி. எ. | வர்த்தகம் |
| சந்திரசேன, பீ. வி. டி. எ. | உண்ணாட்டு அரசிறை |
| கூறே, என். ஆர். எவ். (செல்வி) | பாதுகாப்பு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு |
| தசநாயக்க, டி. என். டி. (திருவாட்டி) | உடனலம் |
| சியல், சி. | மாவட்ட நீதிமன்றம், கல்முனை |
| லெனரோல், பீ. எம். (திருவாட்டி) | கைத்தொழில், கடற்றொழில் அமைச்சு |
| சீடின், எஸ். என். (செல்வி) | தொழில்நுட்பக் கல்லூரி, கட்டுப்பத்தை |
| பெரேரா, ஜி. எ. | சுங்கம் |
| பெரேரா, ஜே. வி. (திருவாட்டி) | கமத்தொழில் சேவைகள் |
| பெரேரா, ஜே. எ. எஸ். | சிவில் மருத்துவப் பண்டசாலை, கொழும்பு |
| வீரக்கூன், பீ. பி. | உள்ளூராட்சி அமைச்சு |
| வீரசிங்க, பி. | பொலிசு |
| வீரசிங்க, எல். பி. ஆர். (திருவாட்டி) | நீதிமுறைச் சேவை ஆணைக்குழு |
| விக்கிரமாராச்சி, டி. (திருவாட்டி) | அரசாங்க மின்சக்தி |
| வாமதேவன், ஜே. எம். (திருவாட்டி) | நீர்ப்பாசனம் |
| சவாகிர், எ. எஸ். எம். | காடு |

பொதுத் திறைசேரி, கொழும்பு,
1969, சனவரி மாதம் 31 ஆந் தேதி.

பீ. டி. உடவெல,
திறைசேரி இணைப் பிரதிச் செயலாளர்.

2–940/3—28.2.69 ந் தேதிய வர்த்தமானி இல. 14,843

---

திறைசேரி இல. : 1/83/17 (ஜி)

## மாற்றத்துக்குரிய சுருக்கெழுத்தாளர் சேவையில் (கீழ்த்தரம்) உள்ள சுருக்கெழுத்தாளர்களுக்கான இரண்டாம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை (ஆங்கிலம்) – ஒற்றோபர், 1968.

1966 ஒற்றோபர் 23 ஆந் தேதிய இல. 134 (ஜி) கொண்ட திறைசேரிச் சுற்றறிவிப்பு நிருபத்திற்கிணங்க ஆண்டுக்கு 2,940/– ரூபாவிற்கு முன்னருள்ள இரண்டாம் வினைத்திறமைகாண் தடைக்கு மேலாகப் பதவியுயர்த்துவதற்கென 1968, ஒற்றோபர் 12 ஆந்தேதி நடாத்தப்பட்ட தகைமைப் பரீட்சையில் மாற்றத்துக்குரிய சுருக்கெழுத்தாளர் சேவையின் கீழ்த்தரத்திலுள்ள கீழ்க் குறிப்பிட்டுள்ள சுருக்கெழுத்தாளர்கள், அவர்களின் பெயர்களுக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களில் சித்தியடைந்துள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| பெயர் | திணைக்களம் | பாடங்கள் |
|---|---|---|
| த சில்வா, எஸ். எம். (செல்வி) | நிதி அமைச்சு | சுருக்கெழுத்து, தட்டெழுத்து |
| டயஸ், பீ. பீ. (திருவாட்டி) | தேசிய திட்டமிடல் | சுருக்கெழுத்து, தட்டெழுத்து |
| பெர்னாந்து, எ. பி. எம். | கல்வி, பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு | சுருக்கெழுத்து, தட்டெழுத்து |
| குணரத்ன, பீ. ஆர். (திருவாட்டி) | இலங்கை அரச விமானப் படை | சுருக்கெழுத்து, தட்டெழுத்து |
| பெரேரா, எச். சி. பி. | தொழில் | சுருக்கெழுத்து, தட்டெழுத்து |
| பீரிஸ். எம். இ. | கச்சேரி, மாத்தறை | சுருக்கெழுத்து, தட்டெழுத்து |
| இராஜபக்ஷ, ஜி. (செல்வி) | கைத்தொழில் கடற்றொழில் அமைச்சு | சுருக்கெழுத்து, தட்டெழுத்து |
| செனிவிரத்ன, கே. எஸ். (திருவாட்டி) | புவிச்சரிதவியல் அளவை | சுருக்கெழுத்து, தட்டெழுத்து |

2. மகாநாட்டுப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தற்போது தகைமை பெற்றுள்ள மேற்படி பரீட்சார்த்திகளும், மகாநாட்டுப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்னர் தகைமை பெற்றவர்களும் அடுத்த மகாநாட்டுப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தங்கள் திணைக்களத் தலைவர்கள் மூலமாகப் பரீட்சை ஆணையாளருக்கு உடனடியாகப் பதிவு அஞ்சலில் விண்ணப்பித்தல் வேண்டும்.

பொதுத் திறைசேரி, கொழும்பு,
1969, சனவரி மாதம் 31 ஆந் தேதி.

பீ. டி. உடவெல,
திறைசேரி இணைப் பிரதிச் செயலாளர்.

2–940/4—28.2.69 ந் தேதிய வர்த்தமானி இல. 14,843

---

திறைசேரி இல. : 1/83/24 (ஜி)

## மாற்றத்துக்குரிய சுருக்கெழுத்தாளர் சேவையில் (கீழ்த்தரம்) உள்ள சுருக்கெழுத்தாளர்களுக்கான இரண்டாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை (தமிழ்) – ஒற்றோபர், 1968.

1966 ஒற்றோபர் 23 ஆந் தேதிய இல. 134 (ஜி) கொண்ட திறைசேரிச் சுற்றறிவிப்பு நிருபத்திற்கிணங்க ஆண்டுக்கு 2,940/– ரூபாவிற்கு முன்னருள்ள இரண்டாம் வினைத்திறமைகாண் தடைக்கு மேலாகப் பதவியுயர்த்துவதற்கென 1968, ஒற்றோபர் 19 ஆந் தேதி நடாத்தப்பட்ட தகைமைப் பரீட்சையில் மாற்றத்துக்குரிய சுருக்கெழுத்தாளர் சேவையின் கீழ்த்தரத்திலுள்ள கீழ்க்குறிப்பிட்டுள்ள சுருக்கெழுத்தாளர், அவரின் பெயருக்கெதிரே குறிப்பிடப் பட்டுள்ள பாடங்களில் சித்தியடைந்துள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| பெயர் | திணைக்களம் | பாடங்கள் |
|---|---|---|
| நடராசா, எஸ். கே. | பொதுத் திறைசேரி | சுருக்கெழுத்து, தட்டெழுத்து |

பொதுத் திறைசேரி, கொழும்பு,
1969, சனவரி மாதம் 31 ஆந் தேதி.

பீ. டி. உடவெல,
திறைசேரி இணைப் பிரதிச் செயலாளர்.

2–940/5—28.2.69 ந் தேதிய வர்த்தமானி இல. 14,843

## நொத்தாரிசு பிரதம பரீட்சை

**1968 ஜூலை மாதம்**

1968 ம் ஆண்டு ஜூலை மாதம் 1 ம் திகதி நடாத்தப்பட்ட நொத்தாரிசு பிரதம பரீட்சை முடிவின் பிரகாரம் நொத்தாரிசு உடன்படிக்கைப்பட்ட லிகிதர்களாக அனுமதிக்கப்படுவதற்கு கீழே குறிக்கப்பட்டிருக்கும் நொத்தாரிசு லிகிதர்களேயும் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றது.

| குத்து இலக்கம் | விண்ணப்பக்காரரின் பெயர் | பயிற்சிபெற எண்ணும் பாஷை |
|---|---|---|
| 146 .. | பெர்ணுண்டு, பீ. சி. எம். | .. சிங்களம் |
| 156 .. | பெர்ணுண்டு, டி. எம். .. | .. ஷை |
| 311 .. | கருணவதி, டபிள்யூ. ஏ. | .. ஷை |
| 397 .. | பாஸ்குவல், ஜே. கே. என். | .. சிங்களம் |
| 594 .. | *சோமசிறி, டீ. பி. ஏ. .. | .. ஷை |
| 705 .. | யாபாரத்ன, டபிள்யூ. .. | .. ஷை |

* நொத்தாரிசு லிகிதர்.

ஆர். சமரசேகர,
பதிவு காரியகர்த்தர்.

பதிவு காரியகர்த்தர் காரியாலயம்,
கொழும்பு,
1969 ம் ஆண்டு பெப்ரவரி மீ 18 ந் உ.

2–1068—28.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,843

---

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## மாத்தறைக் கச்சேரி

*அரசாங்கத்தில் ரூபா 7,500 க்கு அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கு, பதிவுசெய்துள்ள தனிப்பட்ட கொந்திராத்துக் காரர், பகிரங்க வேலைப் பகுதி, நீர்ப்பாசனப் பகுதி, அல்லது கல்விப் பகுதி வேலைகள் நிமித்தம், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், கூலியாள் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றிலிருந்து மாத்தறை டிஸ் திறிக்கினுள், தாரங்கல, கழுபோவிடியான, தங்கல கொளநி யில் இருக்கும், காணிப் பகுதி ஆணையாளருடைய கட்டிடங் களின் பழுதுபார்த்தது, சொற்பமாகிய முன்னேற்ற வேலைகள் செய்வதற்கான கேள்விகள் 1969.3.27 ந் திகதி மு. ப. 11.00 மணிவரை, மாத்தறைக் கச்சேரி, கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*2. மாத்தறைக் கச்சேரி காணிப்பகுதியிலிருந்து பெற்றுக் கொண்ட கேள்விப் பத்திரங்கள் இரண்டு பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேலதிக விபரங்களை மாத் தறைக் கச்சேரியில் இருந்து பெறலாம்.*

*3. ஒவ்வொரு வேலையின் பொருட்டு ரூபா 25/- வைப்புப் பணமாக மாத்தறைக் கச்சேரியில் கட்டப்பட்ட பற்றுச் சீட் டைச் சமர்ப்பிக்கும் தறுவாயில் 1969.3.19 ந் திகதி பகல் 12 மணிவரை கேள்விப்பத்திரங்கள் பெறலாம்.*

*பீ. டப்ளியு. ஸீ. த ஸில்வா,
அரசாங்க அதிபருக்காக,
மாத்தறை மாவட்டம்.*

*மாத்தறைக் கச்சேரி,
1969.2.12.*

*2-910—28.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,843*

---

## பொலிசுத் திணைக்களம்

*ஒரு போட் தேம்ஸ் ரேடர் (**Ford Thames Trader**) பார வண்டியின் (**Heavy Truck**) அடிச்சட்டத்தில் (**Chassis**) ஒரு புதிய உடற்கோப்பு (**New Body**) அமைப்பதற்காய கேள்விப் பத்திரங்கள், பொலிசுத் தலைமைக்காரியாலய கேள் விப்பத்திர சபையின் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்படும்.*

*2. கொழும்பு 5, நாரஹென்பிட்டியா, போக்குவரத்து பொலிசு அதிகாரியிடமோ அல்லது கொழும்புக்கு வெளியே உள்ள எந்தக் கச்சேரியிலோ கேள்விப்பத்திரக் கட்டுப்பண மாக ரூபா 25 கட்டிப்பெற்ற பற்றுச்சீட்டைக்காட்டி, 1969 மார்ச் 10 ம் திகதி நண்பகல் 12.00 மணிவரையும் கொழும்பு-- 5, நாரஹென்பிட்டியா, போக்குவரத்து பொலிசு அதிகாரி யின் காரியாலயத்திலிருந்து கேள்விப்பத்திரப் படிவங்கள் பெற்றுக் கொள்ள முடியும்.*

*3. கேள்விப்பத்திரங்கள், போக்குவரத்து பொலிசு அதிகாரி யிடமிருந்து பெற்ற படிவங்களில் (இரண்டு பிரதிகளாக), 1969 மார்ச் 13 ம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்பாக கொழும்பு — 1, பொலிசுத் தலைமைக் காரியாலய கேள்விப்பத் திர சபையின் தலைவருக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பப் பட வேண்டும். அல்லாவிடில் குறிப்பிட்ட நாளுக்கும் நேரத் துக்கும் முன்பாக, அக்காரியாலயத்திலுள்ள கேள்விப்பத்தி ரப் பெட்டியுள் போடவோ அல்லது பொலிசுத் தலைமைக்காரி யாலயத்திலுள்ள தலைமைக்காரியாலய பொலிசு அதிகாரியிடம் குறிப்பிட்ட நாளுக்கும் நேரத்துக்கும் முன்பாக கொடுத்து அதற்குப் பெற்றுக்கொண்டமைக் கடிதம் பெறவேண்டும்.*

*4. 1969 மார்ச் 13 ம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு மேற் கூறிய காரியாலயத்தில் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் போது கேள்விப்பத்திரகாரர் பிரசன்னமாயிருக்க அனுமதிக் கப்படுவர்.*

*5. மேலதிக விபரங்கள் கொழும்பு 5, நரஹென்பிட்டியா, போக்குவரத்து பொலிசு அதிகாரியின் காரியாலயத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.*

*ஜீ. ஜயசிங்ஹ,
போக்குவரத்து பொலிசு அதிகாரி.*

*போக்குவரத்துப் பொலிசுக் காரியாலயம்,
நரஹென்பிட்டியா,
கொழும்பு — 5,
1969 பெப்ரவரி 12 ம் திகதி.*

*2-916—28. 2. 69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,843*

### காணி அபிவிருத்தித் திணைக்களம்

### கல் உடைக்கும் இயந்திரம் ஒன்று வழங்குவதற்கான கேள்விப்பத்திரம்

மணிக்கு 5 முதல் 6 தொன் கல் உடைக்கக்கூடிய கல் உடைக்கும் இயந்திரம் வழக்குவதற்கான கேள்விப்பத்திரங்களை 1969.4.11 ந் திகதி முற்பகல் 11 மணிவரை காணி அபிவிருத்தி அதிபர் ஏற்றுக்கொள்வார்.

2. கேள்விக்காரர்கள் பின்வருவனவற்றை வழங்குவதற்காகக் குறிக்கலாம். (அ) முன்னைய இருப்பு. (ஆ) கப்பலிலிருந்து உட்கொணரப்பட்டு கிருலப்பனை மத்திய வேலைத்தளத்தில் விநியோகிக்கப்பட்டவை. கேள்விக்காரர்கள் மூந்திய விநியோகக் காலத்தைக் குறிப்பிடலாம்.

3. கேள்விப்பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 50/- கட்டுப் பணமாக இவ்வலுவலகத்திலோ அல்லது காணி அபிவிருத்தி அதிபரின் 1 ம் இலக்கக் கணக்கில் வரவுவைக்கும் பொருட்டு இலங்கை வங்கி (யோர்க் வீதி அலுவலகத்தில்) யிலோ அல்லது கொழும்புக்கு வெளியிலுள்ள ஏதாவது ஒரு கச்சேரியிலோ செலுத்தி, 1969 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ந் திகதி நண்பகல் 12 மணிவரை அதற்குரிய பற்றுச்சீட்டைக் கொழும்பு 1, காணி அபிவிருத்தி அதிபருக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் அவரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில் இரு பிரதிகளில் கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

4. கேள்விப்பத்திரப் படிவங்கள் முதலியவற்றைப் பெற்றும் கேள்விப் பத்திரங்களைச் செலுத்தத் தவறுவோரின் வைப்புப் பணத்தை மீளப் பெறவேண்டுமாயின் கேள்விப் பத்திரங்களை அனுமதிப்பதற்காகக் குறிக்கப்பட்ட திகதியும் நேரமும் முடிவடையுமுன்னர் படிவங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

5. எல்லாக் கேள்விப்பத்திரங்களிலும் "கல் உடைக்கும் இயந்திரமொன்று வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள்" எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டுக் காணி அபிவிருத்தி அதிபர், எச்சலன் சதுக்கம், கொழும்பு 1, என்ற முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டும். கேள்விக்காரரின் பெயரும் முகவரியும் கடித உறையின் இடதுபக்கக் கீழ் மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் தபால் மூலமாயின் பதிவுத் தபாலிலும் அல்லது கேள்விக்காரர் நேரடியாகவும் அல்லது அவரின் முகவர் மூலமும் நேரடியாகவும் பிரதான கணக்காளர், காணி அபிவிருத்தித் திணைக்களத்திலோ அல்லது காணி அபிவிருத்தித் திணைக்களக் கேள்விப்பத்திரப் பெட்டியிலோ சேர்ப்பிக்கலாம்.

6. கேள்விப்பத்திரங்கள் நிரந்தரமானவையும் மாற்ற முடியாதவையுமாகும். கேள்விப்பத்திரங்களை ஒப்பு நோக்குவதற்காக அவைகளைக் கேள்விப்பத்திர முடிவு திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மீளப் பெற்றுக்கொள்ளக் கூடாது.

7. கேள்விக்காரர்கள் விநியோகம் சம்பந்தமான முழு விபரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும். ஏற்றுக்கொண்ட விபரங்களில் ஏதாவது மாற்றமிருப்பின் அவ்வாறு குறிப்பிட்டுக் காட்ட வேண்டும்.

8. தேர்வுபெற்ற கேள்விக்காரர் விநியோகத்தில் தவறிழைப்பின் அவருடைய வைப்புப்பணம் பறிமுதல் செய்யப்படுவதுடன் அவர் அரசாங்க வேலையொப்பந்தங்களைப் பெற முடியாது. தவறிய கேள்விக்காரர் பட்டியலில் சேர்க்கப்படுவர்.

9. கொழும்பு 1, எச்சலன் சதுக்கத்திலுள்ள காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் 1969.4.11 ந் திகதி முற்பகல் 11 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் கேள்விக்காரர் சமூகமளிக்கலாம்.

10. கேள்விப்பத்திரத்தில் சிலவற்றையேனும் அல்லது யாவற்றையேனும் நிராகரிக்க அல்லது சிலவற்றையேனும் ஏற்க அரசாங்கத்திற்கு ஆட்சேபனையற்ற உரிமையுண்டு.

11. மேலதிக தகவல்கள் வேண்டுமாயின் காணி அபிவிருத்தித் திணைக்கள அதிபரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பொ. இரத்தினசிங்கம்,
காணி அபிவிருத்தி அதிபருக்காக.

காணி அபிவிருத்தித் திணைக்களம்,
எச்சலன் சதுக்கம்,
கொழும்பு 1,
1969 ம் ஆண்டு பெப்ரவரி மீ 19 ந் உ.
CT/2/355.

2-1050—28.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,843

---

### அரசாங்க செய்தி மடலில் பிரசுரத்திற்கான அறிவித்தல்

கொழும்பு 3, காலிமுகத்திலுள்ள கடற்றொழில் தலைமைத் திணைக்களத்தில் ஒரு சமயலறை அமைப்பதற்கான கேள்விகளைக் கடற்றொழில் இயக்குநர் 1969.3.20 ந் தேதி 10.00 மணிவரை ஏற்றுக்கொள்வார்.

கேள்விப் படிவங்கள் 1969.3.19 ந் தேதி பிற்பகல் 2.00 மணிவரை காலிமுகத்திலுள்ள கடற்றொழில் திணைக்களத்தாபனக் கிளையில் மீளளிப்புக்கான வைப்புப் பணம் ரூபா 100/—வுடன் பெற்றுக் கொள்ளலாம்.

ஐ. ஓ. கே. ஜீ. பர்ஞந்து,
கடற்றொழில் இயக்குநர்.

கடற்றொழில் திணைக்களம்,
காலிமுகம்,
கொழும்பு 3, பெப்ரவரி 1969.

2-986—28. 2. 69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,843

---

### சுற்றுவதற்குரிய கடதாசிகள் உட்படப் பழைய புதினத்தாள்கள் விற்பனை

### உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை திணைக்களம்

கொழும்பு, த. பெ. 530, உள்ளூராட்சிச்சேவை அதிகாரசபைத் தலைவரால் 1969 ம் ஆண்டு மார்ச் மாதம் 16 ந் திகதி பி. ப. 4.00 மணி வரை ஏறத்தாழ 8 அந்தர்கள் நிறையுள்ள பழைய புதினத்தாள்களும், சுற்றுவதற்குரிய பழைய கடதாசிகளும், வாங்குவதற்காக கூறுவிலைகள் வரவேற்கப்படும்.

2. கொழும்பு, கோட்டை, கபூர் கட்டடம் 1 வது மாடியிலுள்ள 29 1/5 அறையில், கிழமை நாட்களில், அலுவலக நேரங்களில் இக்கடதாசிகள் பார்வையிடலாம்.

3. மேற்குறிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன், விண்ணப்பங்கள் எனக்குக் கிடைக்கும்படி தபாலில் அனுப்பப்படலாம் அல்லது அலுவலகத்தில் உள்ள தபாற் பெட்டியில் போடப்படலாம். கூறுவிலைகள் விண்ணப்ப உறையின் இடதுபுற மேற் கோடியில், "பழைய புதினத் தாள்களை வாங்குவதற்கான விண்ணப்பம்" என்று எழுதப்பட்டிருக்க வேண்டும். உறைமூடப்பட்டு இலச்சினை பொறிக்கப்பட்டிருக்க வேண்டும்.

4. கேள்விப்படிவங்கள் விநியோகிக்கப்படமாட்டா.

5. ஒரு இறுத்தல் பழைய புதினத் தாள்கள், பழைய வர்த்தமானிப் பத்திரிகைகள் பழைய கடதாசிகள் ஆகியவற்றினதும் விலைகளைத் தனித்தனியே குறிப்பிட்டு விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை அனுப்பவேண்டும்.

தலைவர்,
உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை.

த. பெ. 530, கொழும்பு 1.
18.2.1969.

2-991—28.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,843

## நீர்ப்பாசன இலாகா

### செங்கலடி உபபிரிவு

மட்டக்களப்பிலுள்ள கீழைப்பகுதி பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் செங்கலடி உபபிரிவிலுள்ள கீழ்க்காணும் வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள், நீர்ப்பாசன இலாகாவில் கீழ்க்காணும் தொகைக்குக் குறையாமல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 1969 ம் ஆண்டு மார்ச் மாதம் 20 ம் திகதி வியாழக்கிழமை காலை 10.00 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்பட்டு காலை 10.05 மணிக்கு பரிசீலனை செய்யப்படும்.

| கேள்வியின் விபரம் | ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டிய தொகை ரூபா | | கேள்விக் கட்டணத் தொகை ரூபா |
|---|---|---|---|
| (1) இரான்-வடமுனை வீதி 14 ம் 22 ம் கட்டைகளுக்கு இடையில் 27 குழாய் மதகுகள் அமைத்தல் | 30,000 | .. | 50 |
| (2) இரான்-வடமுனை வீதி 8 ம், 14 ம் கட்டைகளுக்கு இடையில் 24 குழாய் மதகுகள் அமைத்தல் | 25,000 | .. | 50 |

2. வெற்றுக் கேள்விப்பத்திரங்கள் 1969 ம் ஆண்டு மார்ச் மாதம் 16 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணிவரையும் செங்கலடி/கல்முனை/அம்பாறை நீர்ப்பாசனக் காரியாலயங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

எஸ். மரியசிங்கம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
செங்கலடி உப பிரிவு.

நீர்ப்பாசன அலுவலகம்,
செங்கலடி,
1969 ம் ஆண்டு பெப்புருவரி மீ 14 ந உ.

2-992—28.2.69 ந திகதிய வர்த்தமானி இல. 14,843

---

## காணி அபிவிருத்திப் பகுதி

1968–69 நிதி வருடத்து பின் அரை ஆண்டு காலத்துக்குக்கீழே கொடுக்கப்பட்டுள்ள திட்டங்களுக்குக் கட்டிடப் பொருட்கள் கொடுப்பதற்கான கேள்விப் பத்திரங்கள் மாங்குளம் காணி அபிவிருத்தி அதிகாரியினால் கோரப்படுகின்றன.

**மன்னார் மாவட்டம்.**—பெரிய பண்டி விரிச்சான்குளம், சின்னப்பண்டி விரிச்சான்குளம், பெரியமடு, கூறேகுளம், மடுரோட்.

**வவுனியா மாவட்டம்.**—பாவற்குளம், வவனியாப்பட்டினம், மாங்குளம், சுதந்திரபுரம், தேவிபுரம், முத்தையன் கட்டுக்குளம், உடையார் கட்டுக்குளம் இடைக்காட்டுக்குளம், ஒதியமலை.

**யாழ்ப்பாண மாவட்டம்.**—வவனிக்குளம், அக்கராயன்குளம், வன்னேரிக் குளம், அம்பலப் பெருமாள் குளம், கனகபுரம், கிளிநொச்சி, திருவையாறு, கனகாம்பிகைக் குளம், தருமபுரம், விஸ்வமடுக் குளம், காரியாலை நாகபடுவான், மிருசுவில்.

2. கீழே குறிப்பிட்டுள்ள கட்டிடப் பொருட்கள் மேற்கூறிய திட்டங்களுக்குக் கொடுப்பதற்கான கேள்விப் பத்திரங்கள் மாங்குளம் காணி அபிவிருத்தி அதிகாரியினால் 1969 மார்ச்சு 12 ம் திகதி நண்பகல் 12 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

(க) கிடுகு (இணை)—1000 மாக
(ங) சுட்ட சுண்ணும்பு—புசலாக
(ச) நீற்றுச் சுண்ணும்பு—புசலாக
(ஞ) சுட்ட செங்கல்—1000 மாக (பிரமாணம் 8¾″ × 4½″ × 2¾″)
(ட) கல்லு (6″ முதல் 9″ வரை) வெள்ளை—கியூப்பாக
(ண) கல்லு (6″ முதல் 9″ வரை) கருங்கல்—கியூப்பாக
(த) சல்லிக்கல்லு ½″ வெள்ளை—கியூப்பாக
(ந) சல்லிக்கல்லு ½″ கருங்கல்—கியூப்பாக
(ப) சல்லிக்கல்லு ¾″ வெள்ளை—கியூப்பாக
(ம) சல்லிக்கல்லு ¾″ கருங்கல்—கியூப்பாக
(ய) சல்லிக்கல்லு 1″ வெள்ளை—கியூப்பாக
(ர) சல்லிக்கல்லு 1″ கருங்கல்—கியூப்பாக
(ல) சல்லிக்கல்லு 1½″ வெள்ளை—கியூப்பாக
(வ) சல்லிக்கல்லு 1½″ கருங்கல்—கியூப்பாக
(ழ) சல்லிக்கல்லு 2″ வெள்ளை—கியூப்பாக
(ள) சல்லிக்கல்லு 2″ கருங்கல்—கியூப்பாக

குறிப்பு.—விலைகள் வெவ்வேறாக இவைக்குக் குறிப்பிடுக.

(அ) தயாரிக்கும் இடத்தில்,
(ஆ) வேலைத்தலத்தில்.

3. கேள்விப்பத்திரம் பெறுவதற்குமுன் இக்காரியாலயத்திலோ அல்லது ஏதாவது ஒரு கச்சேரியிலோ, வைப்புப் பணமாக ரூபா 50 கட்டி அதற்குரிய பற்றுச்சீட்டு எனக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. ஒன்றிற்கோ அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட திட்டங்களுக்கோ பொருட்கள் கொடுப்பதற்கு கேள்விப்பத்திரங்கள் அனுப்பலாம்.

5. கேள்விப்பத்திரங்கள் 1969 மார்ச்சு 4 ம் திகதி தொடக்கம் 1969 மார்ச்சு 10 ம் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம்.

6. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப்பத்திரதாரர் என்னால் வேண்டப்படும் நாளிலிருந்து 10 நாட்களுக்குள் வேண்டப்படும் பொருட்களைக் கொடுத்தல் வேண்டும். அப்படிக் கொடுக்கத் தவறுவோர், தவறிய ஒப்பந்தகாரர் பட்டியலில் சேர்க்கப்படுவதற்கு ஆளாவதுடன் தமது வைப்புப் பணத்தையும் இழக்க நேரிடலாம்.

7. கேள்விப்பத்திரங்கள் யாவும் "கட்டிடப்பொருட்கள் கொடுப்பதற்கான கேள்விப்பத்திரம்" எனத் தபால் உறையின் இடதுபுற மேல்மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும். எல்லாக் கேள்விப்பத்திரங்களும் முத்திரிக்கையிடப்பட்டு பதிவுத்தபால் மூலம் காணி அபிவிருத்தி அதிகாரி, மாங்குளம் என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். அல்லது இக் காரியாலயத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியினுள் போடப்படல் வேண்டும்.

8. கேள்விப் பத்திரதாரர் கேள்விப்பத்திரங்கள் திறக்கும்போது 1969 மார்ச்சு 12 ம் திகதி பிற்பகல் 3 மணிக்கு பிரசன்னமாக இருக்கலாம்.

9. மேலும் விபரங்கள் மாங்குளம் காணி அபிவிருத்தி அதிகாரியிடமிருந்து அறிந்து கொள்ளலாம்.

க. பொன்னம்பலம்,
காணி அபிவிருத்தி அதிகாரி.

காணி அபிவிருத்தி அலுவலகம்,
மாங்குளம்,
1969 ம் ஆண்டு பெப்புருவரி மீ 18 ந உ.

2–1081—28.2.69 ந திகதிய வர்த்தமானி இல. 14,843.

---

## *கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு*

*கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுவுக்கு 120 கனயார் கொள்ளளவுள்ள மரத்தினால் செய்யப்பட்ட 2 "ஹொப்பர்" படகுகளுக்கென சுமார் 8 தொன் முதல் 10 தொன் வரையுள்ள பாரத்தை கையாளக்கூடிய, வேகமாக விடுவிக்கும் கையினால் செயற்படுத்தப்படும் 8 உயர்த்து பொறி (விஞ்சு) களை வழங்குவதற்கும் ஒப்படைப்பதற்குமான கேள்விப் பத்திரங்களைக் கொழும்பிலுள்ள கொழும்பு கப்பற்றுறை ஆணைக் குழு கேள்விச் சபைத் தலைவர் 1969 மார்ச் 30 ந் திகதி பிற்பகல் 2.30 மணிவரை ஏற்றுக் கொள்வார்.*

*1969 மார்ச் 30 ந் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்பொழுது கேள்வியாளர்கள் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.*

*கேள்விப்பத்திரங்களைப் பதிவுத் தபாலில் அனுப்ப விரும்பாத கேள்வியாளர்கள் கேள்விச் சபைத் தலைவரால் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கென அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தரிடம் கேள்விப்பத்திரங்களை நேர்முகமாகக் கொடுத்து அவைகளை அவர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புக் கூற்றை எழுத்து மூலம் அவரிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அல்லது அவர் நேர்முகமாக வந்து தங்களின் கேள்விப் பத்திரங்களை இத்திணைக்கள கேள்விப் பத்திரப் பெட்டியில் சேர்ப்பித்தல் வேண்டும்.*

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு அலுவலகத்தில் கேள்வி சம்பந்தமான சாதனங்களைப் பார்வையிடலாம். கேள்வி வைப்புப் பணமாக ரூபா 100/- கொழும்பிலுள்ள கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு சிறுப்பர் வழங்கிய பற்றுச்சீட்டுடன் கொழும்பு கப்பற்றுறை ஆணையாளருக்கு விண்ணப்பஞ் செய்வோருக்குக் கேள்விப் பத்திரப் படிவங்கள் வழங்கப்படும். கேள்வி வைப்புப் பணம் கேள்வி நிபந்தனைகளுக்கேற்ப திருப்பிக் கொடுக்கப்படும்.

மேலே குறிப்பிட்ட பிரகாரம் பெற்றுக் கொள்ளப்படும் படிவங்களில் கேள்விப் பத்திரங்கள் இருத்தல் வேண்டும். கேள்வி சம்பந்தமான சாதனங்கள் 1969 மார்ச் 28 ந் திகதி நண்பகல் 12.00 மணிவரை வழங்கப்படும்.

எல். எஸ். த சில்வா,
கப்பற்றுறை ஆணையாளர்க்காக.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு,
கொழும்பு 1, 1969.2.27.

2-1088—28.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,843

---

## கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு

5,000 ஓடுகள், " அன்ரிமொனி " பாளம், வெண்கலப்பாளம், குளிரேற்றி (பிறிஜ்), 2 ' லேத் மெஷீன்கள் ', டி. சி. ஜெனரேட்டர், டீசல், மறீன் என்ஜின்கள், வட்டவடிவ வாள், ஒஸ்றின் எஞ்ஜினும், பம்பும், நிலையான அலகுகள், அசையும் அலகுகள் போன்ற பொருட்களை விற்பதற்கென கேள்விப் பத்திரங்களைக் கொழும்பிலுள்ள கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு கேள்விச் சபைத் தலைவர் 1969 மார்ச் 30 ந் திகதி பிற்பகல் 2.30 மணிவரை ஏற்றுக் கொள்வார்.

1969 மார்ச் 30 ந் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்பொழுது கேள்வியாளர்கள் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

கேள்விப் பத்திரங்களைப் பதிவுத் தபாலில் அனுப்ப விரும்பாத கேள்வியாளர்கள் கேள்விச் சபைத் தலைவரால் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கென அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தரிடம் கேள்விப் பத்திரங்களை நேர்முகமாகக் கொடுத்து அவைகளை அவர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புக் கூற்றை எழுத்து மூலம் அவரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். அல்லது அவர் நேர்முகமாக வந்து தங்களின் கேள்விப் பத்திரங்களை இத்திணைக்கள கேள்விப் பத்திரப் பெட்டியில் சேர்ப்பித்தல் வேண்டும்.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு அலுவலகத்தில் கேள்வி சம்பந்தமான சாதனங்களைப் பார்வையிடலாம். கேள்வி வைப்புப் பணமாக ரூபா 100/- கொழும்பிலுள்ள கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு சிறுப்பர் வழங்கிய பற்றுச்சீட்டுடன் கொழும்பு கப்பற்றுறை ஆணையாளருக்கு விண்ணப்பஞ் செய்வோருக்குக் கேள்விப் பத்திரப் படிவங்கள் வழங்கப்படும். கேள்வி வைப்புப் பணம் கேள்வி நிபந்தனைகளுக்கேற்ப திருப்பிக் கொடுக்கப்படும்.

மேலே குறிப்பிட்ட பிரகாரம் பெற்றுக் கொள்ளப்படும் படிவங்களில் கேள்விப் பத்திரங்கள் இருத்தல் வேண்டும். கேள்வி சம்பந்தமான சாதனங்கள் 1969 மார்ச் 28 ந் திகதி நண்பகல் 12.00 மணிவரை வழங்கப்படும்.

எல். எஸ். த சில்வா,
கப்பற்றுறை ஆணையாளர்க்காக.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு,
கொழும்பு 1, 1969.2.27.

2-1087—28.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,843

---

## கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுவுக்கு துறைமுக தொழிற் களஞ்சியத்தில், 2 " அவுற் போட் மோட்டர் " களை கையிருப்பிலிருந்து வழங்குவதற்கும் ஒப்படைப்பதற்குமான கேள்விப் பத்திரங்களைக் கொழும்பிலுள்ள கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு கேள்விச் சபைத் தலைவர் 1969, மார்ச் 24 ந் திகதி பிற்பகல் 2.30 மணிவரை ஏற்றுக் கொள்வார்.

1969, மார்ச் 24 ந் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்பொழுது கேள்வியாளர்கள் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

கேள்விப் பத்திரங்களைப் பதிவுத் தபாலில் அனுப்ப விரும்பாத கேள்வியாளர்கள் கேள்விச் சபைத் தலைவரால் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கென அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தரிடம் கேள்விப் பத்திரங்களை நேர்முகமாகக் கொடுத்து அவைகளை அவர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புக் கூற்றை எழுத்து மூலம் அவரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். அல்லது அவர் நேர்முகமாக வந்து தங்களின் கேள்விப் பத்திரங்களை இத்திணைக்கள கேள்விப் பத்திரப் பெட்டியில் சேர்ப்பித்தல் வேண்டும்.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு அலுவலகத்தில் கேள்வி சம்பந்தமான சாதனங்களைப் பார்வையிடலாம். கேள்வி வைப்புப் பணமாக ரூபா 50/- கொழும்பிலுள்ள கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு சிறுப்பர் வழங்கிய பற்றுச்சீட்டுடன் கொழும்பு கப்பற்றுறை ஆணையாளருக்கு விண்ணப்பஞ் செய்வோருக்குக் கேள்விப் பத்திரப் படிவங்கள் வழங்கப்படும். கேள்வி வைப்புப் பணம் கேள்வி நிபந்தனைகளுக்கேற்ப திருப்பிக் கொடுக்கப்படும்.

மேலே குறிப்பிட்ட பிரகாரம் பெற்றுக் கொள்ளப்படும் படிவங்களில் கேள்விப் பத்திரங்கள் இருத்தல் வேண்டும். கேள்வி சம்பந்தமான சாதனங்கள் 1969 மார்ச் 22 ந் திகதி நண்பகல் 12.00 மணிவரை வழங்கப்படும்.

எல். எஸ். த சில்வா,
கப்பற்றுறை ஆணையாளர்க்காக.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு,
கொழும்பு 1,
1969 பெப்பிரவரி 24.

2-1089—28.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,843

## இலங்கை அரசாங்கம்

## தேசிய வீடமைப்புத் திணைக்களம்

### அனுராதபுர வீடமைப்புத் திட்டம்

**50 இலக்கங்களுள்ள 2 படுக்கை அறை மாதிரி வீடுகளையும், 4 இலக்கங்களுள்ள குடிநீர்க் கிணறுகளையும் அமைத்தல்**

விஞ்ஞான ஆராய்ச்சி, வீடமைப்பு அமைச்சு, விஜேராம ரோட்டு, கொழும்பு 7 இல் உள்ள கேள்விச் சபைத் தலைவரால் 50 இலக்கங்கள் கொண்ட 2 படுக்கை அறை மாதிரி வீடுகளையும், 4 இலக்கங்களுள்ள குடிநீர்க் கிணறுகளையும் அமைத்தற்காக 1969 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 29 ம் திகதியிற் காலை 10 மணி வரை கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் போது கேள்வியாளர்கள் சமூகமளிக்கலாம்.

கேள்விப் பத்திரங்கள் இத்திணைக்களக் கண்காணிப்புப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் இரு பிரதிகளாக அனுப்பப்படல் வேண்டும். மேலும் தேவையான விபரங்கள் யாவற்றையும் இவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகள் " அ " எனவும், கேள்வி " ஆ " எனவும், கேள்வி " அ, ஆ " எனவும் பின்வருமாறு உபபிரிவுகளாகப் பிரிக்கப்படும் :—

கேள்வி " அ "—25 இலக்கங்களுள்ள 2 படுக்கை அறை வீடுகளையும் 2 குடிநீர்க் கிணறுகளையும் அமைத்தல்

கேள்வி " ஆ "—25 இலக்கங்களுள்ள 2 படுக்கை அறை வீடுகளையும், 2 குடிநீர்க் கிணறுகளையும் அமைத்தல்

கேள்வி " அ, ஆ "—50 இலக்கங்களுள்ள 2 படுக்கை அறை வீடுகளையும் 4 குடிநீர்க் கிணறுகளையும் அமைத்தல்

பொது வேலைத் திணைக்களத்தில்/நீர்ப்பாசனத் திணைக்களத்தில்/அரசாங்கத் திணைக்களங்களில்/அரசாங்கக் கூட்டுத்தாபனங்களில் வேலைகளுக்காக கேள்வி " அ " க்கு ரூபா 4 இலட்சம் அதற்கும் மேற்பட்ட தொகைக்கும், கேள்வி " ஆ " க்கு ரூபா 4 இலட்சம் அதற்கும் மேற்பட்ட தொகைக்கும், கேள்வி " அ, ஆ " க்கும் ரூபா 8 இலட்சம் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் மாத்திரமே கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர். பதிவுச்சான்றிதழையும், ஒவ்வொரு தொகுதிக்கும் கேள்விக் கட்டுப் பணமாக இத்திணைக்களச் சிருப்பரிடம் ரூபா 250/- செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டையும் சமர்ப்பிக்கும் ஒப்பந்தக்காரர்களுக்கு 1969 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 20 ம் தேதிவரை கேள்விப் படிவங்கள் வழங்கப்படும்.

து. இராஜேந்திரா,
தேசிய வீடமைப்பு ஆணையாளர்.

தேசிய வீடமைப்புத் திணைக்களம்,
த. பெ. இல. 544,
சேர் சிற்றம்பலம் காடினர் மாவத்தை,
கொழும்பு 2,
1969 ம் ஆண்டு பெப்ரவரி மீ 20 ந உ.

2–1044 –28.2.69 ந் திகதிய வ.ர்த்தமானி இல. 14,843

---

## காணி அபிவிருத்தித் திணைக்களம்

***10 மலேதுனே பொறிகள் வழங்குவதற்கான கேள்விப்பத்திரம்***

*1969.2.14 ந் திகதிய அரசாங்க வர்த்தமானி இலக்கம் 14,841 ல் பிரசுக்கப்பட்ட 1969.2.7 ந் திகதிய விளம்பரம் தொடர்பாக கேள்விப்பத்திரங்கள் கொடுப்பதற்கான திகதியும், கேள்விப்பத்திரங்களை மூடுவதற்கான திகதியும் பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளன :—*

*கேள்விப்பத்திரப் படிவங்கள் கொடுப்பது 1969.3.27 ந் திகதி நண்பகல் 12 மணிவரை.*

*கேள்விப்பத்திரங்கள் மூடுவதற்கான திகதி 1969.3.28 முற்பகல் 11 மணி.*

*கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் திகதி 1969.3.28 மு. ப. 11.30 மணி.*

*பந்தி 2—கேள்விக்காரர்கள் பின்வருவனவற்றை வழங்குவதற்காகக் குறிக்கலாம்.*

*(அ) முன்னைய இருப்பு. (ஆ) இறக்குமதி செய்த தொகை அத்துடன் (இ) இறக்குமதி செய்து கிருலப்பனை மத்திய வேலைத்தலத்தில் விநியோகிக்கப்பட்டவை. கேள்விக்காரர்கள் முந்திய விநியோகக் காலத்தைக் குறிப்பிடலாம்.*

*பொ. இரத்தினசிங்கம்,*
***காணி அபிவிருத்தி அதிபருக்காக.***

*காணி அபிவிருத்தித் திணைக்களம்,*
*எச்சலன் சதுக்கம்,*
*கொழும்பு. 1*
*1969.2.19.*
*சீசீ/2/354.*

2–1049—28.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,843

---

## மக்கள் வங்கி

அங்கீகரிக்கப்பட்ட கொந்தருத்துக்காரர்களிடமிருந்து மஹியங்கனையில் மக்கள் வங்கிக் கட்டங்கள் நிறுவுவதற்கு ரெண்டர் பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன.

ரெண்டர் சமர்ப்பிக்க விரும்புபவர்கள் கடந்த இரு வருடங்களினுள் ரூபா 1,50,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்குத் தனிக் கட்டடம் அமைத்துள்ளமை பற்றிய சான்றுகளை இணைக்கட்டடக்கலைஞர்களான எஸ். எச். பீரிஸ் அன்ட் ஆனந்த பீரிஸ் அவர்களுக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். மேற்கூறிய கட்டடக்கலைஞர்கள் திருத்தியடையும் முறையில் நம்பிக்கைச் சான்றுகள் சமர்ப்பிக்கும் கொந்திருத்துக்காரர்களுக்கு மாத்திரம் ரெண்டர் படிவங்கள் வழங்கப்படும்.

ரெண்டர் செய்ய விரும்புபவர்கள் இக்கட்டடம் பற்றிய விவரக் கூற்றுக்கள் அளவுப்பட்டியல்கள் 1/8″ இடைப்படங்கள், ¼″, ½″ விரிவுக் இடைப்படங்கள் முதலியவற்றை கொழும்பு 7, விஜேராமவத்தை 27 ஆம் இலக்கத்தில் உள்ள மக்கள் வங்கியின், நிலமனை அலுவலகத்தில், அலுவலக நேரங்களில் பரிசீலனை செய்யலாம்.

ரெண்டர் சாதனங்களைப் பெறுதற்கு எஸ். எச். பீரிஸ் அன்ட் ஆனந்த பீரிஸ், இணைக்கட்டடக்கலைஞர்கள், ஐந்தாம்மாடி, செலிங்கோ மண்டபம், கொழும்பு, என்ற முகவரிக்கு அலுவலக நேரங்களில் விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்பத்துடன் 1/8″ அளவுக்கிடைப்படம் விவரக்கூற்றுகள், அளவுப் பட்டியல்கள் என்பனவற்றின் செலவுகளுக்காகத்திருப்பிக் கொடுக்கப்படாததான ரெண்டர் கட்டணம் ரூபா 50 செலுத்தப்படல் வேண்டும். விரிவுப் படங்களைப் பெறவிரும்புபவர்கள் மேலதிமாக ரூபா 100 செலுத்தி அவற்றைக் கட்டடக் கலைஞர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளவும் முடியும்.

ரெண்டர் யாவற்றையும் அல்லது எதனையேனும் நிராகரிக்கும் உரிமை வங்கிக்கு உண்டு.

" மஹியங்கனை மக்கள் வங்கிக் கட்டடங்கள் அமைத்தல் " என்று குறிக்கப்பட்ட முத்திரையிடப்பட்ட ரெண்டர்கள் 1969 மார்ச் மாதம் 12 ஆந் திகதி பி. ப. 4.30 மணிக்கு முன் மக்கள் வங்கி, 27, விஜேராம மாவத்தை கொழும்பு 7 முகவரியில் வழங்கல் நிலமனை உத்தியோகத்தருக்குக் கிடைக்கும்படி அனுப்பி வைத்தல் வேண்டும்.

வழங்கல் நிலமனை உத்தியோகத்தர்.

மக்கள் வங்கி,
27, விஜேராம மாவத்தை,
கொழும்பு 7.

2–1046—28.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,843

## வோக்ஸ் வாகன் மோட்டார் இரதம், பென்ஸ் மோட்டார் சிறு பஸ்வண்டி, வூல்ஸ்லி மோட்டார் இரதம் ஆகியன வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள்

சுங்க இலாகாவின் கேள்விப் பத்திர ஆணைக்குழுவின் தலைவர் 1969 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 15 ஆம் தேதி காலை 10 மணிவரை, கீழ்க்காணும் இரதங்களை கொள்முதல்செய்து கொண்டு செல்வதற்கு வேண்டிய முத்திரையிடப்பட்ட ஆணைப்பத்திரங்களை ஏற்றுக் கொள்ளுவார்:

(அ) மேசிடீஸ் பென்ஸ் உல்லாச வாகன்மான சிறிய பஸ் வண்டி ஒன்று. (பாவிக்கப்பெற்றது)

(ஆ) வூல்ஸ்லி மோட்டார் வண்டி 1940 ஆம் ஆண்டு வெளியேற்றப்பட்டது. (பாவிக்கப் பெற்றது)

(இ) வோக்ஸ்வாகன் மோட்டார் வண்டி 1967 ஆம் ஆண்டு வெளியேற்றப்பட்டது. கொழும்புத் துறைமுகத்தில் பிரயாணிகள் துறைமுகமேடை வாயிலின் எதிரில் காணப்படுவது.

2. கேள்வி ஆணைப்பத்திரங்கள், பிரதம இலிகிதர் கந்தோரில் விநியோகிக்கப்படும் பத்திரங்களில் நிறைவேற்றப்பட்டு முத்திரையிடப்பட்ட கடித உறைகளில், "தலைவர், கேள்விப் பத்திர ஆணைக்குழு, சுங்கம், கொழும்பு" என்று விலாசமிடப்பட்டு "சிறிய பஸ் வண்டிக்குரிய கேள்விப்பத்திரம்" என்றோ "வூல்ஸ்லி மோட்டார் வண்டிக்குரிய கேள்விப்பத்திரம்" என்றோ "வோக்ஸ்வாகன் மோட்டார் வண்டிக்குரிய கேள்விப்பத்திரம்" என்றோ கடித உறையின் மேல் இடது பக்க மூலையில் எழுதப்பட்டு, பதிவுத் தபால் மூலம், தலைவர், கேள்விப் பத்திர ஆணைக்குழு, சுங்கம், கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். இன்றேல் மேலதிக இறக்குமதி ஆணையாளரின் கந்தோர் முகதாவில் இருக்கும் கேள்வி விண்ணப்பப் பத்திரப் பெட்டியினுள் போடப்படல் வேண்டும்.

3. அங்கீகாரமளிக்கப்பட்ட கேள்விப்பத்திரதாரர்கள், கேள்விப் பத்திரம் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வாரத்திற்குள் முழுப் பணமும் கொடுத்து வண்டிகளை அப்புறப்படுத்த வேண்டும். அப்படிச் செய்யத் தவறும் கேள்விப்பத்திரகாரர்களின் கேள்விப் பத்திர முதலீடு பறிமுதல் செய்யப்படும்.

4. கேள்வி ஆணைப்பத்திரப் பாரங்கள் 1969 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 14 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை சுங்க இலாகா பிரதம இலிகிதரின் கந்தோரிலிருந்து முதலீடாகிய ரூபா 200/- க்குரிய பற்றுச்சீட்டின் பேரில் பெற்றுக் கொள்ளலாம்.

5. கேள்வி ஆணைப்பத்திரமுடையோர் வாகனங்களைப் பரிசோதிப்பதற்கு அருகதையுடையோராவர். இறக்குமதி ஆணையாளரோடு முன் ஒழுங்குசெய்து துறைமுக வளவுக்குள் பரீட்சார்த்த ஓட்டத்திற்குரிய ஒழுங்குகள் செய்து கொள்ளலாம். இறக்குமதி ஆணையாளரின் தொலைபேசி இல. 28192 வாகனங்களுக்குப் பொறுப்பாளரின் தொலைபேசி இலக்கம் : 21141 Ext : 226.

6. இந்த இலாகா வாகனங்களிலுள்ள பழுதுகளுக்கோ அல்லது திருத்தங்களுக்கோ எவ்வித பொறுப்பும் எடுக்கமாட்டாது. வாகனங்கள் தற்போதுள்ள நிலையிலேயே விற்கப்படும்.

7. வாகனத்தைப் பதிவு செய்வதற்குரிய எல்லாச் செலவுகளுக்கும் கூடுதலான ஆணைப்பத்திரம் உடையவராக இருப்பவரே பொறுப்புள்ளவராவர்.

8. ஆணைப்பத்திரக் குழுவின் தலைவர் எந்த ஆணைப்பத்திரத்தையோ அல்லது பத்திரத்தின் பகுதியையோ அங்கீகரிக்கவும் அல்லது நிராகரிக்கவும் உரிமையுடையவராவார். அவரின் தீர்மானம் இறுதியானது.

9. கேள்வி ஆணைப்பத்திரங்கள் மூடப்பட்ட தேதியிலிருந்து மூன்று வாரங்கள்வரை குறிப்பிட்ட விலைகளை அங்கீகரிப்பதற்கு அவகாசம் அளிக்கப்படல் வேண்டும்.

10. கேள்வி ஆணைப்பத்திரதாரர்களோ அல்லது அவர்கள் பிரதிநிதிகளோ, விரும்பினால் கேள்வி ஆணைப்பத்திரங்கள் திறக்கப்படும்பொழுது, பத்திரங்களைப் பரீட்சிப்பதற்கு அருகதையுடையோராவர்.

11. வாகனங்கள், கேள்வி ஆணைப்பத்திரம் அங்கீகரிக்கப்பட்ட தேதியிலிருந்து, யாருடைய ஆணைப்பத்திரம் அங்கீகரிக்கப்பட்டதோ அவரது பொறுப்பிலேயே துறைமுக வளவிற்குள் இருக்கும்.

வீ. பீ. சில்வா,
கேள்வி ஆணைப்பத்திரக் குழுவின் தலைவருக்காக.

எனது இல : ஏடீ/ரெண்டர்/90,
சுங்கம்,
கொழும்பு, 1969.2.20.

2-1055—28.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,843

---

## கமத்தொழில் திணைக்களம்

### சம்மாந்துறை, கமத்தொழிற் பண்ணைக்கு, (அம்பாறை மாவட்டம்) தெளிகருவி விநியோகித்தல், பாரம்கொடுத்தல், முருங்கன், கமத்தொழிற் பண்ணையில் களம் அமைத்தல், (கமத்த) வாய்கால் அமைத்தல்; ஆகியவற்றுக்கான கேள்விகள்

கீழ்க்காணப்படும் வேலைகள் சம்பந்தமாக, சீல்வைக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 21.3.1969 ந் திகதி மு.ப. 10 மணிவரையும் கமத்தொழில் அதிகாரி (ப.மு.ஆ.) ரால் யாழ்ப்பாணம் கமத்தொழிற் கந்தோரில் ஏற்றுக்கொள்ளப்படும்.

**(i) சம்மாந்துறை கமத்தொழிற் பண்ணைக்கு, தெளிகருவி விநியோகித்தல், பாரம்கொடுத்தல்.**—மருந்துத் தாள், விசுறும் கருவி, இணைந்த முற்றும் காற்றினால் குளிரப்படுத்தும் இயந்திரத்தினால் இயங்கும் தெளி கருவி, இக்கருவியின் நிறை, 20 ரூத்தலுக்குக் கூடாமலும் 12 ரூத்தல், மருந்துத் தாளுடன் 2 கலன் தண்ணீர் மருந்து கொள்ளக்கூடிய, அளவினதாயமைதல் வேண்டும்.

இத்தெளிகருவி, மட்ட நிலையில் நிமிடத்திற்கு .15 கலன் தொடக்கம் .75 கலன் வரை இயங்கக் கூடியதாகவும், உயரத்திற்கு உந்தும் பொழுது, நிமிடத்திற்கு .07 கலன் தொடக்கம் .60 கலன் வரை, தேவைக்கேற்றவாறு, 4 முறைகளில் கட்டுப்படுத்தி இயக்கக் கூடியதாயிருத்தல் வேண்டும்.

தெளிகருவி, குறைந்தது 10 யாருக்கு குறையாமல் தெளிக்கக் கூடியதாகவும், தூள்விசிறி குறைந்தது 30 யாருக்கு குறையாமல், விசிறக்கூடிய, சக்தியுடையதாகவும் இருத்தல் வேண்டும். இக்கருவி, இதற்குத் தேவையான நடைமுறை ஆயுதங்களுடன், அவசியமான, உதிரிப்பாகங்களுடன் கொடுக்க வேண்டும்.

மேற் கூறிய திட்டப்படி திருப்திக்கமைய புதிய தெளிகருவி, கேள்விக்காரரால் விநியோகித்தல் வேண்டும். தெளிகருவி, பண்ணை அதிபரின் திருப்திக்கமைய, வேலைசெய்யத் தொடங்கியவுடன், பணம் கொடுக்கப்படும். தெளிகருவியின் விளக்கங்கள் அடங்கிய பிரதியையும் இணைத்தல் வேண்டும். தெளிகருவிக்கும், உபகரணங்களுக்கும், அறவிடும் தொகையைக் குறிப்பிடவேண்டும்.

கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டதாக, கேள்விக்காரருக்கு அறிவிக்கப்பட்டு 3 மாதகாலத்துக்குள், விநியோகித்தல், பாரம்கொடுத்தல், முடிவடைதல் வேண்டும்.

(ii) **முருங்கன், கமத்தொழிற் பண்ணையில் 225 கியூப் அளவு சூடுமிதிக்கும் களம் (கமத்த) கட்டுதல்.**—களத்தின் அளவுகள், 110′ X 100 அடி கொண்டதும் 2 அடி உயரமுடையதும் ஆகும். தண்ணீர் தேங்கி நிற்காத வகையில் பக்கங்கள், சரிவுடையதாய் தட்டி மட்டப்படுத்தி அமைத்தல் வேண்டும். பண்ணை அதிபரால் குறிப்பிடப்படும் இடத்தில் இருந்து, ½ மைல் அல்லது ¾ மைல் தூரத்தில் இருந்து மண் வெட்டிக் கொண்டு வந்து நெற் கமத்தில், அவர் குறிப்பிடும் இடத்தில் அமைத்தல் வேண்டும்.

கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்ட 14 நாட்களுக்குள் வேலை தொடங்கி, 1969.8.31 ம் திகதிக்கு முன் முடிவடைதல் வேண்டும். தவணை கொடுக்கப்படமாட்டாது. ஒரு கியூப்புக்கு அறவிடும் தொகையைக் குறிப்பிட வேண்டும். பண்ணை அதிபர் அல்லது அவர் பிரதிநிதி திருப்திப்படும் வண்ணம் அவர்கள் குறிப்பிட்டபடி, மேற் கூறிய காலத்துக்குள், அமைத்தல் வேண்டும். செய்யப்பட்ட கியூப் அளவின்படியே பணம் கொடுக்கப்படும்.

(iii) **முருங்கன் கமத்தொழிற் பண்ணையில் 45 கியூப் வரம்பு கட்டுதல்.**—மேல்தளம், 1′6″ அகலமும் கீழ்த்தளம், 4 அடி உயரமும், 3′6″ கொண்தாய், 500 அடி நீளமான நீர்ப்பாச்சல் வாய்க்காலும், (வடிந்தோடும் வாய்க்காலும்) வழியே, பண்ணை அதிபர் குறிப்பிடும் நெற் கமப் பகுதியில், வரம்பு கட்டி, தட்டி, மட்டப்படுத்தல் வேண்டும். பண்ணை அதிபர் குறிப்பிடும் இடத்தில் இருந்து ½ மைல் அல்லது ¾ மைல் தூரத்தில் மண் வெட்டிக் கொண்டுவந்து கட்டுதல் வேண்டும். எல்லாப் பக்கங்களிலும் மண் அணைத்தல் வேண்டும்.

கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்ட 14 நாட்களுக்குள் வேலை தொடங்கி, 1969.8.31 க்கு முன் முடிவடைதல் வேண்டும். தவணை கொடுக்கப்படமாட்டாது. ஒரு கியூப்புக்கு அறவிடும் தொகையைக் குறிப்பிட வேண்டும். பண்ணை அதிபர் அல்லது அவர் பிரதிநிதி திருத்திப்படும் வண்ணம் அவர்கள் குறிப்பிட்டபடி, மேற்கூறிய காலத்துக்குள் கட்டுதல் வேண்டும். செய்யப்பட்ட கியூப் அளவின் படியே பணம் கொடுக்கப்படும்.

2. மேற்கூறப்பட்ட நிலையங்களிலும் செய்யும் வேலைகள் சேவைகளுக்கு வெவ்வேறான கேள்விப் பத்திரங்கள் தயாரித்தல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப் பத்திரங்களுக்கும் ரூபா 10/- வைப்புப்பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

3. யாழ்ப்பாணம் கமத்தொழிற் கந்தோரில் கமத்தொழில் அதிகாரி (ப.மு.ஆ.) யால் கொடுக்கப்படும் விண்ணப்பப் படிவங்களிலேயே கேள்விப் பத்திரங்கள் கோருதல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் இரு பிரதிகளில் தயாரித்துக் கையொப்பமிட்டு சீல்போட்ட தபால் உறையுள் வைத்து, கமத்தொழில் அதிகாரி (ப.மு.ஆ.) கமத்தொழிற் கந்தோர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். பதிவுத் தபாலில் அனுப்பாவிட்டால் யாழ்ப்பாணம் கமத்தொழிற் கந்தோருக்கு (ப. மு. ஆ.) கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ நேரில் சென்று சீல் வைத்த உறைகளை இதற்கென வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் இடுதல் வேண்டும். கேள்விப் பத்திரங்களடங்கிய தபாலுறையின் இடதுபுற மேல் மூலையில் வேலையின் பெயர்க் குறிப்பு “ , (சேவையின் பெயரும் நிலையமும் கொடுக்கப்பட வேண்டும்.) ஆகிய வேலைகளுக்கான கேள்விப்பத்திரம்” என்று குறிப்பிட வேண்டும். கேள்விப் பத்திரங்களைத் திறந்து பார்த்தபின் அவை கிடைத்தமை பற்றிய உறுதிப்பத்திரங்கள் ஒவ்வொரு கேள்விக்காரருக்கும் அனுப்பப்படும். கேள்விப்பத்திரம் கோரும் முடிவுத் திகதிக்குப் பின்னர் நான்கு நாட்களுக்குள் உறுதிப் பத்திரம் கிடைக்காத கேள்விக்காரர் யாழ்ப்பாணம் கமத்தொழிற் கந்தோரில், கமத்தொழில் அதிகாரியுடன் (ப.மு.ஆ.) தொடர்பு கொள்ள வேண்டும்.

4. ஒவ்வொரு கேள்விப் பத்திரத்திற்கும் வைப்புப்பணமாகக் கட்டிப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டைக் கொடுத்து முடிவுத் திகதிக்கு முன்தினம் பகல் 12 மணி வரையும் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ள முடியும். கேள்விப்பத்திர வைப்புப் பணம் எச்செயலகங்களிலும் அல்லது கமத்தொழில் இலாகா, போராதனையில் செலுத்துதல் வேண்டும். வேலை ஒப்பந்தம் கைச்சாத்தானதும் வைப்புப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிவித்தல் கிடைத்த 10 நாட்களுக்குள் கேள்விக்காரர் வேலை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் தவறின் தனது கேள்விப்பத்திர வைப்புப்பணத்தை இழப்பதுடன் தாமத வேலை செய்யும் கொன்தராத்துக் காரர்களின் பட்டியலில் அவர்கள் பெயர் சேர்க்கப்படுவதுடன் இது சம்பந்தமாக எந்தவிதக் கடிதத் தொடர்பையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ள மாட்டாது. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் பண்ணை முகாமையாளர்களினால் கொடுக்கப்படும் திகதிகளில் வேலைகளை ஆரம்பித்து குறிப்பிட்ட காலத்திற்குள் பூர்த்தியாக்கத் தவறின் ஒப்பந்தத்தில் கூறியவாறு நஷ்டஈடு செலுத்துவதற்கு ஆளாவார்.

5. கேள்விப்பத்திரக்காரர் விரும்பின் கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் பிரசன்னமாகலாம். யாழ்ப்பாணம் கமத்தொழிற் கந்தோரில் (ப.மு.ஆ.) கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். திறக்கப்படும் நேரமும் திகதியும் கேள்விப்பத்திர முடிவுத் திகதி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

6. அங்கிகரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களில் (இரு பிரதிகளில்) அல்லது அதில் கூறப்பட்ட நிபந்தனைகளுக்கமையாத விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கேள்வித் தொகையும் மொத்தமும் மையினால் தெளிவாக எழுதப்பட வேண்டும். கேள்விப்பத்திரங்களில் அழித்து எழுதுதலும் பிழை திருத்தங்களும் கேள்விப்பத்திரக்காரரால் முதலெழுத்துக் கையொப்பமிடப்பட்டிருக்க வேண்டும்.

7. கேள்விப்பத்திரக்காரர் தமது பூரணமான பெயர், முகவரி ஆகியவற்றை பெரிய எழுத்தில் தெளிவாக எழுதுதல் வேண்டும்.

8. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதுடன் கேள்விப்பத்திரத்தின் மொத்தத் தொகையின் 5 வீதத்தை பிணைப்பணமாகக் கமத்தொழில் அதிபரிடம் செலுத்துதல் வேண்டும். இப்பணம் கொந்தராத்து வேலையைச் சரிவரச் செய்து முடித்த பின்னரே திருப்பித்தர முடியும். தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் வேலையைச் சரிவரச் செய்து முடிக்காவிடின் அவருடைய பிணைப்பணம் அரசாங்கத்தைச் சேருவதுடன் அவருடைய பெயர் கொந்தராத்துக்காரர்களின் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு தாமத வேலை செய்யும் கொந்தராத்துக் காரரின் பட்டியலில் சேர்க்கப்படும்.

9. ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் பொழுது ஒப்பந்தப் பத்திரத்தில் ஒட்டப்படும் முத்திரைக்கான செலவைக் கேள்விப்பத்திரக்காரர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

10. கொந்தராத்துக்காரர் தமது வேலையைத் திருப்திகரமாகச் செய்யாமலோ குறிப்பிட்ட தினத்திற்குள் பூர்த்தியாக்காமல் இருந்தாலோ அவரது கொந்தராத்தை முடிவுறச் செய்யும் அதிகாரம் கமத்தொழில் அதிபருக்குண்டு. இப்படியான சந்தர்ப்பத்தில் கொந்தராத்துக்காரரின் செலவில் அவ்வேலையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு வேறுவித ஒழுங்குகள் செய்வதற்கு கமத்தொழில் அதிபர் உரிமையுடையவராவார்.

11. கொந்தராத்துக்காரர் கோரும் கேள்விகள் முழுதையுமோ சிலபகுதிகளையோ அனுமதிக்கவும் நிராகரிக்கவும் அரசாங்கத்திற்கு உரிமையுண்டு.

12. கேள்விப்பத்திரக்காரர் கேள்விகள் முடிவு திகதியில் இருந்து மூன்று கிழமையை கேள்விப்பத்திரங்கள் பரிசீலனை செய்து ஏற்றுக்கொள்ளும் தினமாக வைத்திருத்தல் வேண்டும்.

13. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் பயிற்றப்பட்ட பயிற்றப்படாத இலங்கையரையே வேலைக்கமர்த்துதல் வேண்டும். கூடியவரை வேலை நடைபெறும் பிரதேசங்களில் இருந்தே கூலியாட்களை வேலைக்கமர்த்துதல் வேண்டும்.

இந்நிபந்தனைகளுள் ஏதாவது ஒன்றுக்கு அமையாது வேலை செய்யும் கேள்விப்பத்திரக்காரர் கொந்தராத்து வேலை நிராகரிக்கப்படுவதற்கு ஆளாவார். விசேட சூழ்நிலையில் கமத்தொழில் உணவுற்பத்தி மந்திரியின் எழுத்துமூல அங்கீகாரத்தைப் பெற்றிருந்தால் மாத்திரமே இலங்கையரல்லாத ஒருவரை வேலைக்கமர்த்த முடியும்.

எழுத்து மூலம் அங்கீகாரம் பெறாது இலங்கையரல்லாத ஒருவரை வேலைக்கமர்த்துவது அவரது கொந்தராத்து வேலையை இழப்பதற்கு வழிகோலும்.

“இலங்கையர்” என்னும் பதம் இலங்கையின் வம்சாவழியினரை அல்லது பதிவு செய்யப்பட்ட ஒருவரைக் குறிக்கும்.

அமைய ஊழியர்களின் தற்போதைய அல்லது வருங்காலத்தில் செய்யப்படும் சம்பளச்சட்ட திட்டங்களுக்கமைய இக் கொந்தராத்தில் வேலைபார்க்கும் கூலியாட்களின் சம்பளங்கள் நிர்ணயிக்கப்படல் வேண்டும். கமத்தொழில் அதிபரினால் அங்கீகரிக்கப்பட்ட கமத்தொழில் இலாகாவில் வேலைபார்க்கும் ஓர் உத்தியோகத்தர் கொந்தராத்துக்காரரின் வேலைசம்பந்தமான புத்தகங்கள், சம்பளப்பட்டியல், வரவுப்பட்டியல் ஆகிய தஸ்தாவேஜுகளைப் பார்வையிடுவதற்குக் கோரப்படுவர்.

14. எல்லா அறிவித்தல்களும் கேள்விப்பத்திரக்காரருக்கு நேரடியாக, அல்லது தபால்மூலம் அனுப்பப்பட்டால் அது அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படும்.

15. 1934 ம் ஆண்டு தொழிலாளர் நலவுரிமைச் சட்ட இல. 19 (பகுதி 117) இன்கீழ் தொழிலாளரினால் செய்யப்படும் அரசாங்கத்தைப் பாதிக்கும் முறைப்பாடுகளுக்கு கொந்தராத்துக்காரரே பொறுப்புடையவராவார்.

16. விரும்பத்தகாதவரை வேலைக்கமர்த்துவதை எதிர்ப்பதற்கு அரசாங்கத்துக்கு உரிமையுண்டு.

17. குற்றப்பட்ட கொந்தராத்துக்காரர்கள் தனித்தோ அல்லது கூட்டாகவோ கேள்விப்பத்திரங்கள் கோரின் அவர்களுடன் கமத்தொழில் அதிபர் விரும்பாவிடின் ஒப்பந்தம் செய்து கொள்ள மாட்டார்.

18. மேலும் விவரங்கள் தேவைப்படின் ஒவ்வொரு பண்ணைகளுக்குமுரிய அதிபர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பி. ரி. ஜினேந்திரதாச,
பிரதிக் கமத்தொழில் அத்தியட்சகர் (க. க.. வும். ப.).

பேராதனை.

2-911—28. 2. 69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,843

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

## அரசாங்கப் பண்டசாலைத்துறை

1969 ம் ஆண்டு மார்ச் மாதம் 15 ம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு கொழும்பு 2, சேர் சித்தம்பலம் கார்டினர் மாவத்தையிலுள்ள அரசாங்க பண்டசாலைத்துறையில் நன்றாகப் பாவிக்கப்பட்ட 15 மோட்டார் வாகனங்கள் (கார்கள், வான்கள், மோட்டார் சைக்கிள்) பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

மேற்படி அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் வாகனங்களைப் பார்வையிடலாம். மேலதிகமான விபரங்களை அரசாங்கப் பண்டசாலைத்துறையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

எஸ். ஏ. பீ. றாபசிங்க,
அரசாங்க பண்டசாலைத்துறை
அத்தியட்சர்.

கொழும்பு
1969 ஆண்டு பெப்புருவரி மீ 27 ந் உ.

2-1077—28.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,843

## ஏல விற்பனை

### பழுதடைந்த 4 ஸ்ரீ 7736 லாண்ட் ரோவர்
### பொலநறுவைக் கச்சேரி

பொலநறுவைக் கச்சேரிக்குச் சொந்தமான 4 ஸ்ரீ 7736 லாண்ட் ரோவர் 1969 ம் ஆண்டு பங்குனி மாதம் 6 ம் திகதி மு. ப. 10 மணிக்கு பொலநறுவைக் கச்சேரி வளவில் பகிரங்க ஏல விற்பனைக்கு விடப்படும். பரிசோதனை செய்ய விரும்பியவர்களுக்கு இந்த வாகனம் ஏலவிற்பனைக்கு முந்திய எந்த நாளிலும் பார்வைக்கு விடப்படும். ஏலவிற்பனையின் பின் இதைப் பெற்றுக்கொண்டவர் உடனடியாக முழுப்பணத் தொகையையும் கச்சேரியில் கட்ட வேண்டும். அதன் பின் இந்த வாகனத்தைப் பெற்றுக்கொண்டவர், கச்சேரி வளவிலிருந்து மூன்று நாட்களுக்கிடையில் அகற்ற வேண்டும்.

கே. எச். ஜே. விஜயதாச,
அரசாங்க அதிபர்,
பொலநறுவை மாவட்டம்.

கச்சேரி,
பொலநறுவை.
1969 ம் ஆண்டு தை மாதம் 6 ம் திகதி.

2-1085—28.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,843

## ஏல விற்பனை

### லாரி இல. சி. என். 5799

கந்தளாய் நகர காவலர் நிலையத்திற்கெதிராயுள்ள வாகன சாலையில் உள்ள சி. என். 5799 இலக்கத்தைக் கொண்ட வோட்சன் தேம்ஸ் லாரியை 1969 ம் ஆண்டு மார்ச் மாதம் ஞாயிற்றுக்கிழமை 9 ந் திகதி காலை 10 மணிக்கு ஏலத்தில் விற்கப்படும். இந்த லாரியை ஏல விற்பனைக்கு முன்பு பார்வையிட விரும்புவோர் கந்தளாய் காரியாதிகாரியுடன் தொடர்பு வைக்கவும்.

இந்த லாரி ஏலத்தில் விற்கப்பட்டதும் அதை வாங்குபவர் உடனடியாகப் பணத்தைக் கொடுத்து 14 நாட்களுள் எடுத்துச் செல்ல வேண்டும்.

பிரான்சிஸ் எக்ஸ் ஜோக்கிம்,
அரசாங்க அதிபருக்காக.
திருக்கோணமலை மாவட்டம்.

கச்சேரி,
திருகோணமலை,
14.2.69.

2-909—28. 2. 69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,843

---

## கண்டெடுக்கப்பட்ட கைவிடப்பட்ட பொருட்கள் விற்பனை

கண்டெடுக்கப்பட்டனவும், உரிமை கோராது விடப்பட்டனவுமான பொருட்கள் கொழும்பு இழந்த சொத்துச் சேமக் காரியாலயத்தில் (போக்கு வரத்து மேற்பார்வையாளர் அலுவலக அடித்தளத்தில்) 1969 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 8 ம் திகதி சனிக்கிழமை பி. ப. 1.00 முதல் ஏலத்தில் விற்கப்படும்.

ஏலம் நிகழுமிடத்தில் விற்பனை நாள் காலை 10.30 மணி முதல் பொருட்கள் பார்வைக்கு வைக்கப்படும்.

பி. டி. றம்பாலா,
தலைமை அதிபர்,
இலங்கை அரசாங்கப் புகையிரதத் திணைக்களம்.

த. பெ. இல. 355,
கொழும்பு, 12.12.69.

2-989—28.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,843

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

**இலங்கை அரசாங்க வர்த்தமானி** சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் **வர்த்தமானி** வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

**அட்டவணை—1969**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| **சனவரி** | 3.1.69 | வெள்ளி | 24.12.68 | செவ்வாய் | பி. ப. 3.30 |
| | 9.1.69 | வியாழன் | 3. 1.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 16.1.69 | வியாழன் | 9. 1.69 | வியாழன் | ந. ப. 12.00 |
| | 24.1.69 | வெள்ளி | 16. 1.69 | வியாழன் | ந. ப. 12.00 |
| | 31.1.69 | வெள்ளி | 24. 1.69 | வெள்ளி | ந. ப. 12.00 |
| **பெப்புருவரி** | 7.2.69 | வெள்ளி | 31. 1.69 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | 14.2.69 | வெள்ளி | 7. 2.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 21.2.69 | வெள்ளி | 14. 2.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 28.2.69 | வெள்ளி | 20. 2.69 | வியாழன் | பி. ப. 3.30 |
| **மாச்சு** | 7.3.69 | வெள்ளி | 27. 2.69 | வியாழன் | பி. ப. 3.30 |
| | 14.3.69 | வெள்ளி | 7. 3.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 21.3.69 | வெள்ளி | 14. 3.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 28.3.69 | வெள்ளி | 21. 3.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| **ஏப்பிறல்** | 3.4.69 | வியாழன் | 27. 3.69 | வியாழன் | பி. ப. 3.30 |
| | 11.4.69 | வெள்ளி | 31. 3.69 | திங்கள் | பி. ப. 3.30 |
| | 18.4.69 | வெள்ளி | 8. 4.69 | செவ்வாய் | ந. ப. 12.00 |
| | 25.4.69 | வெள்ளி | 18. 4.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 30.4.69 | புதன் | 23. 4.69 | வியாழன் | ந. ப. 12.00 |
| **மே** | 9.5.69 | வெள்ளி | 30. 4.69 | புதன் | பி. ப. 3.30 |
| | 15.5.69 | வியாழன் | 9. 5.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 22.5.69 | வியாழன் | 15. 5.69 | வியாழன் | ந. ப. 12.00 |
| | 30.5.69 | வெள்ளி | 22. 5.69 | வியாழன் | ந. ப. 12.00 |
| **யூன்** | 6.6.69 | வெள்ளி | 30. 5.69 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | 13.6.69 | வெள்ளி | 6. 6.69 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | 20.6.69 | வெள்ளி | 13. 6.69 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | 27.6.69 | வெள்ளி | 20. 6.69 | வெள்ளி | பி. ப. 3.30 |

அரசாங்க அச்சகம், கொழும்பு,
1968 ம் ஆண்டு டிசம்பர் மீ 20 ந் உ.

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
பதில் அரசாங்க அழுத்தகன்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.